www.tamilarangam.net

பொங்கும்

# தமிழமுது

புரட்டாசி-1985 விலை ரூபா. 1-50



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## காத்திருக்கும் கவிதை

பா. மயூரன்

மக்களால்
மக்களுக்காக
மக்கள் — என்ற
அரசின் ஆட்சியில்
மக்களுக்காக — நானும்
ஒரு
கவிதையை எழுதினேன்.

அது
நரிக மனங்களைத்
தட்டி எழுப்பும்
தாலாட்டானதென்று—பலர்
என்னையே
தட்டிக் கொடுத்தார்கள்...

வரலாற்றை வளர்த்தெடுக்கு
பாமர ஜீவன்களுக்காக
பா ஒன்றைப் பாடினேன்.

அது
தூங்கிப் போயிருக்கும்
துப்பாக்கிமுனையில் ஒலிக்கும்
புரட்சியின்
புதிய கீதமென்று சொல்லி
என்னைப்
பூரிக்க வைத்தார்கள்...

அடக்குமுறைக் கெதிராக
அடியெடுத்து — ஒரு
கவிதையை
முடித்து வைக்க முன்பாக
எனக்கு
முடிவுகட்டும் வகையில் — ஒரு
முடிவு
அரசினால்
அறிவிக்கப்பட்டது.

அதுகூட — தங்கள்
அறியாமையை
அகற்றிவிட்டதாக
ஆனந்தப்பட்டார்கள்...

அப்போது — என்
சிறிய உருவம்
சிறைக் கம்பிகளுக்குப்
பின்னிருந்து
சிந்தித்துக் கொண்டிருந்தது.

அன்று கூட
வானொலியில் — ஒரு
வரவேற்பு...
வாலைலையில் — என்
கவியின் வரிகளைக்
காணத் துடித்தவர்களின்
கால்களிலும்
ஒரு ஈர்ப்பு...

தோழர்களே!
இனி — என்
கவியின் வரிகள்
காற்றில் வரும்போது
உங்கள் — நெஞ்ச
ஏட்டில்
எழுதிக் கொள்ளுங்கள்.

என்றோ ஒருநாள்
என் பேனா முனையில்
பிறக்கப்போகும்
தீப் பொறிகளால்
சிறைக்கம்பிகள் கூட
சிவக்கத் தொடங்கும்!

அன்றும் — என்கவிகள்
உங்களுக்காகக்
காத்திருக்கும்.


பொங்கும்

# தமிழமுது

கிண்ணம் 3 • துளி 6


## திம்புவில் இருந்து எங்கே?

சுதந்திரம் என்ற பெயரில் சிங்களத் தலைவர்களுக்கு அரசியல் அதிகாரம் கைமாற்றப்பட்டதிலிருந்து தமிழர் பிரச்னைக்கு தீர்வு(!) காண்பதற்காகப் பல தசாப்தங்களாகவே பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றுவந்துள்ளன. எனினும் எந்தக் கட்டத்திலும் தமிழர் உரிமைகள் பறிக்கப்படுவது நிறுத்தப்படவில்லை. இனிப் பேச்சு வார்த்தைகளால் எவ்விதப் பயனுமில்லை என்ற 'நிலையிலேயே தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் மேற்கொள்ளப் பட்டது. 1983 ஜூலைக்குப் பிறகு இனப்படுகொலையே அரசின் கொள்கை என்பதைப்போல அரச பயங்கரவாதம் ஜயவர்த்தனா அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்டது. உலகப் பத்திரிகைகள், அறிஞர்கள், அரசியல்வாதிகள், மனித உரிமை ஸ்தாபனங்கள் என்று பலரும் ஸ்ரீலங்கா அரசைக் கடுமையாகக் கண்டித்தனர். ஆனால் எதையும் ''கண்டுகொள்ளாத'' ஜயவர்த்தனா அரசு தொடர்ந்து பயங்கரவாதத்தை மேற்கொண்டது. தமிழர்களை அழிப்பதற்கென்றே தனது ஆயுத பலத்தை அதிகரித்துவந்தது. அதே வேளையில் விடுதலை இயக்கங்கள் போராடி வந்தன. சில போராளிகளையும் ஆயிரக்கணக்கான அப்பாவித்தமிழர் களையும் கொன்று குவித்துள்ளனர். தமிழரின் பிரதேசங்கள் 'பெரு மளவில் அபகரிக்கப்பட்டுள்ளன. குடியேற்றப்படும் சிங்களவர் களும் ஆயுதபாணியாக்கப்பட்டார்கள்.

இந்தச் சூழலில்தான் பேச்சுவார்த்தையினால் தீர்வு காணலாம் எனப் போராளிகள் அழைக்கப்பட்டனர். தேசிய விடுதலைப் போராட்டம் என்றால் என்ன என்பதை அறிந்தவர்களும், மனித உரிமை, மனிதாபிமானம், சுயாதிபத்தியம் போன்றவற்றை அறிந்த வர்களும் இதைக் கேட்டுத் திகைத்தார்கள். ''போர் நிறுத்தம்'' எனக் கூறப்பட்டது. அது மீறப்பட்டது. தமிழர் தொடர்ந்தும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



துன்புறுத்தப்பட்டார்கள். கைது செய்யப்பட்டார்கள். எனினும் போர்நிறுத்த நிபந்தனைக் காலம் முடியுமுன்பே பேச்சுவார்த்தை தள்ளிவரப்பட்டது. இது மேலும் குழப்பத்தை ஏற்படுத்திற்று.

அரசியல் தீர்வு காண்பதற்காகத் திம்புவில் போடப்பட்ட மேசைக்கு ஸ்ரீலங்காவிலிருந்து அரசாங்கத்தினரோ அரசியல் வாதிகளோ வரவில்லை. அங்குவந்த மக்களறியாத மனிதர்களும் தமிழ்மக்கள் ஓர்மத்தோடு நிராகரித்த பழைய சங்கதியையே விவரித்தார்கள். அதைச் சுருட்டி வைத்த தமிழ்ப் பிரதிநிதிகள் நான்கு அடிப்படை உரிமைகளை உள்ளடக்கிய தீர்வைக் கொண்டு வரச் சொன்னார்கள்.

இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகளின்போது சிங்கள பௌத்த அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள்: தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசியஇனமில்லை, அவர்களுக்குப் பாரம்பரிய தாயகம் இல்லை, சுயநிர்ணய உரிமை இல்லை, என்று. (நாலாவது அம்சமான மலையக மக்களுக்குக் குடியுரிமை வழங்க ஜனாதிபதி ஒப்புக்கொண்டுவிட்டாரென்றும் கூறியுள்ளார்கள். ஆனால் ''நாடற்றவர்கள்'' என்று கூறப்படும் அனைவருக்குமே குடியுரிமை வழங்கவேண்டும் என்பதே விடுதலை இயக்கங்களின் கோரிக்கை என்பதை இவர்கள் புரிந்துகொள்ள மறுத்திருக்கின்றார்கள்). அத்துடன் 'இவர்கள் தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதிகளல்ல' என்றும் கூறி ஒரு புது முட்டுக்கட்டையைப் போட முயன்றிருக்கிறார்கள். ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட தீர்வையே சில சொற்களை மாற்றி முன்வைத்திருக்கிறார்கள். அதே வேளையில் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகளின்போது பல நூறு தமிழர்கள் வவுனியா, திருகோணமலைப் பகுதிகளில் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். இவையெல்லாம் ஒரு அரசியல் தீர்வைக் காண முயற்சிப்பதற்கான அடையாளங்களல்ல என்று விடுதலை இயக்கத்தினர் பேச்சுவார்த்தைகளைப் பகிஷ்கரித்து வெளிநடப்புச் செய்துள்ளனர்.

ஆனால்,

இம்முறை புதிய திட்டங்களுடன் வாருங்கள், அரசியல் வாதிகளை—அரசாங்க உறுப்பினர்களை—அனுப்புங்கள் என்றெல் லாம் பாரதப் பிரதமர் கேட்டுக் கொண்டதையெல்லாம் புறக் கணித்தே ஸ்ரீலங்கா நடந்துள்ளதோடு; திம்புவிலும், தமிழீழத் திலும் குழப்பங்களை உருவாகியுள்ள நிலையில் விடுதலை இயக்கத் தினர் தொடர்ந்து பேசத்தான் வேண்டும் என்ற கருத்து நிலவு வதாகத் தெரிகிறது.



என்னதான் ஆனாலும், போனதே போயாயிற்று, கடைசிவரை என்னதான் சொல்கிறார்களென்று பேசித்தான் பார்த்திருக்கலாமே எனக் கூறுவது ஒரு சார்பான நிலைபாட்டில் சரியென்றே தெரி கிறது.

மறுபுறத்தில் ஏன்? எதற்காக? எதை எதிர்பார்த்துப் பேச வேண்டும்? என்று கேட்கப்படுகிறது. எந்த மக்களுக்காகப் பேச்சு வார்த்தை நடத்தப்படுகிறதோ அந்த மக்கள் பதைக்கப் பதைக்கப் படுகொலை செய்யப்படும்போது இந்தக் கேள்விகளிலும் நியாயத் தைத் தவிர வேறேதும் இருப்பதாகத் தெரியவில்லை.

எது எவ்வாறாயினும் இந்தியப் பிரதமரைச் சந்தித்திருக் கலாம், இந்த உண்மைகளை நேருக்கு நேராகவே விளக்கியிருச் கலாம் என்றே படுகிறது.

நடந்துவிட்ட விரும்பத்தகாத சம்பவங்களுடன் இதுவும் ஒரு தீர்க்கதரிசனமற்ற தவறாக இருந்துவிடலாம். ஆனால் இவற்றுக் கெல்லாம் விலை கொடுப்பது யார்? தொடர்ந்தும்—உயிருக்கேகூட உத்தரவாதமில்லாத தமிழீழ மக்கள்தானா? சிறிய சதுரங்கப் பலகையில் இருந்து பெரிய சதுரங்கப் பலகையில் தூக்கிப் போடுவதா?

நிலம் நம் காலடியில்தானே இருக்கிறது என்பதற்காக அதை உதைப்பதும் உதாசீனம் செய்வதும் அறிவல்ல. நிலம் சினக்குமா? அது பிளக்குமா?

ஆயுதப் போராட்டம் என்பது வேறு, அரசியல் சாணக்கியம் என்பது வேறு.

திம்புக்குச் சென்றது அரசியல் ஆயுதப் போராட்டத்தைச் சக்திப்படுத்துவதற்கென்றால்...

வெற்றி யாருக்கு?

இனி அங்கிருந்து எங்கே?

ஆறு படகுகளும் ஒரு கப்பலானால் திசை தப்பாமல் செல்ல முடியும்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நெருப்பின் மக்களே

— கவிஞர் எழிலரசு —

மூச்சுகள் நிற்பதும்
முண்டமாய்ச் சாய்வதும்
வாடிக்கையாய்த் தினம் ஆமோ? — இனிப்
பேடிகள் வாழ்ந்திடலாமோ?

நேற்றொரு சூரியன்
இன்றொரு சூரியன்
நாளைக்கு சூரியன் வேறோ? — நாம்
நாதியில்லாப் பிணக் கூறோ?

வந்தவர் வாழ நீ
வகைகெடச் சாய்வதோ?
சொந்தமாய் நாடில்லைத் தம்பி — நீ
நொந்ததெல்லாம் போதும் நம்பி!

வம்பை வளர்த்தனர்
வாழ்வைப் பறித்தனர்
அம்புகள் தைத்தது போதுமே — நீ
அழியுமுன் தீருமோ தாகமே!

தாயுடன் தந்தையும்
தீயினில் போயினர்
நீயென்ன? பொல்லாத பேச்சு — அட
நிறுத்தடா! போக்'கவர்' மூச்சு!

நேற்றைய போரினில்
சுற்றமும் போனபின்
நாற்றென நிற்கிறதோழனே — நீ
நாளைக்கு வேண்டிய வீரனே!

நெஞ்சை நிமிர்த்திடு
நெற்றி உயர்த்திடு
நீள்கரத்தில் வாளை ஏந்து — பகை
நொடிப்பினில் வீழ்ந்திடும் சாய்ந்து!

காளையுன் தோள்களால்
நாளைகள் தோன்றிடும்
வாளுக்குப் பகைவனைக் காட்டு — உன்
வரலாற்று வரியை நீ தீட்டு!

# உலக இளைஞர் மாணவர் விழா

● ச. கண்ணன்

12வது உலக இளைஞர்களதும், மாணவர்களதும் விழாவானது ரஷ்யாவின் தலைநகரான மொஸ்கோவில் யூலை 27ம் திகதி அன்று ஆரம்பமாகி இரண்டு வாரங்கள் நடைபெற்றது. விழாவின் ஆரம்ப நாளன்று 2000 புறாக்கள் வான வெளியிலே சுதந்திரமாகப் பறக்கவிடப்பட்டன. இந்நிகழ்ச்சியானது - கலந்துகொள்ளல், நட்புறவு, சமாதானம் என்னும் இவ்விழாவின் கருத்துக்கள், குறிக்கோள்கள் ஆகியவற்றின் மத்தியில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும். உலகிலுள்ள பல கண்டங்களைக் கொண்ட வெவ்வேறு தேசிய இனங்களையும் வெவ்வேறு சமூகப் பாரம்பரியங்களையும் வெவ்வேறு உலகக் கண்ணோட்டங்களையும் உடைய பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள், மாணவர்கள், விளையாட்டு வீரர்கள், திரைப்படக் கலைஞர்கள் எழுத்தாளர்கள். ஆகியோர் இவ்விழாவில் பங்கேற்றுக் கொண்டனர்.

இவ்விழாவின் போது 15க்கு மேற்பட்ட விவாத மன்றங்கள், கூட்டங்கள், சிறப்புரைகள், கண்காட்சிகள், திரைப்பட நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள் போன்ற பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்ச்சிகளுடன் இந்தியாவினால் ஆரம்பிக்கப்பட்ட தேசிய மன்றம் ஓய்வு நேரங்களில் பல கருத்தரங்குகளையும், கலந்துரையாடல்களையும், நடாத்தியது. இங்கு இவ்விழாவில் கலந்துகொண்ட அனைத்து நாடுகளின் இளைஞர்களும், மாணவர்களும், தம்நாட்டுப் பொருட்களை விற்கவும், வாங்கவும் வசதிகள் கொடுக்கப்பட்டது.

பல தேசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. இவ்விளையாட்டுப் போட்டிகளில் விழாவிற்கு வந்திருந்த அனைத்து நாடுகளின் இளைஞர்களும், மாணவர்களும் கலந்துகொண்டு போட்டியினைச் சிறப்பித்தனர். இவ்விளையாட்டுப் போட்டியானது சர்வதேச சமாதான ஓட்டப்பந்தயம் என்னும் சிறப்பு நிகழ்ச்சியுடன் முடிவுற்றது.

நடைபெற்ற 12வது இளைஞர்கள், மாணவர்கள் விழாவில் விவாதமன்றங்களும், சொற்பொழிவுகளும் கருத்தரங்குகளும், முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் உலக மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதாகவும் அமைந்திருந்தன. இரண்டாவது உலக மக்களின் மகாயுத்தத்தால் உலகில் ஏற்பட்ட விளைவுகளைக் கவனத்திற்கொண்டு இன்று உலகில் யுத்தங்கள் ஏற்படாது சமாதானத்திற்கு உறுதியுடன் போராட வேண்டும் என அனைத்து நாடுகளையும் சேர்ந்த மாணவர்களும், இளைஞர்களும் ஆழ்ந்த கண்ணோட்டத்துடன் கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொண்டனர்.

www.tamilarangam.net



இன்று முதலாம் மண்டல நாடுகள் தாம் உற்பத்தி செய்த பொருட்களை விற்பனை செய்வதற்கு இரண்டாம் மண்டல, மூன்றாம் மண்டல நாடுகளில் சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்கின்றன. இந்தச் சந்தை வாய்ப்பை ஏற்படுத்தும்போது போட்டிகள் ஏற்படுகின்றன. இந்தப் போட்டிகளால் சந்தையில் எந்தப் பொருளுக்கு கேள்வி நிரம்பல்கள் அதிகமாகக் காணப்படுகின்றனவோ, அந்தப் பொருட்களை அதிகளவில் விற்பனை செய்கின்றன. இதே போன்று இன்று விஞ்ஞான வளர்ச்சியில் முன்னேறியுள்ள நாடுகள் அந்த விஞ்ஞான வளர்ச்சியின் மூலம் உற்பத்தி செய்த அணு ஆயுதத் தளபாடங்களைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கும், சந்தைப்படுத்துவதற்கும் இன்று இரண்டாம், மூன்றாம் மண்டல நாடுகளில் சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்தும் போது போட்டிகள் ஏற்படுகின்றன. இந்தப் போட்டிகளை யுத்தமாக மாற்றுவதற்கு இன்று முதலாம் மண்டல நாடுகள் முனைகின்றன. விஞ்ஞான வளர்ச்சி மனித சமுதாயத்தில் முக்கியமானதொன்றாகும். இதனால் இன்று மனித சமூகத்திற்கு எவ்வளவோ நன்மைகள் கிடைக்கப் பெறுகின்ற வேளையில் இதனால் ஏற்படுகின்ற தீமைகள் மனித சமுதாயத்தையே அழிக்கும் ஆற்றல் பெற்றுள்ளது. விஞ்ஞான வளர்ச்சியால் உற்பத்தி செய்யப்பட்டுள்ள அணுஆயுதத் தளபாடங்கள் செயலிழக்கச் செய்யப்படுதல் வேண்டும், மேலும் உற்பத்தி செய்வதை நிறுத்துதல்வேண்டும். இதன் மூலம் அணு ஆயுதப் போரை நிறுத்தி உலக சமாதானத்தை மேற்கொண்டு உலக நாடுகள் பரஸ்பர நல்லிணக்கங்களை ஏற்படுத்தி உலகில் மனிதன் மனிதனாக வாழ வழிவகைகள் செய்ய வேண்டும். இன்றைய கால கட்டத்தில் அணு ஆயுதப் போரை பூமியிலும், விண்வெளியிலும் மேற்கொள்வதால் உலகில் உள்ள மக்கள் மத்தியில் அதனால் ஏற்படும் விளைவுகள் பற்றி ஆழ்ந்த கண்ணோட்டத்துடன் கூடிய கருத்துக்கள் இந்த விழாவில் பரிமாறப்பட்டன. அணு ஆயுதப் போரினாலும், அணு ஆயுதப் பொருள் உற்பத்தியாலும் ஏற்படக் கூடிய மனித இன அழிவு பற்றி அனைவரும் கலந்தாலோசித்து விவாதித்தது குறிப்பிடத்தக்கது.

அணு ஆயுதப் போரைப் பூமியிலும் வான வெளியிலும் ஏற்படாது தடுக்கவும் உலகநாடுகளிடையே அணு ஆயுதப் போர் நடைபெறாமல் தடுக்கவும், மனித இனத்தை அழிவிலிருந்து காப்பாற்றவும் கலந்து கொள்ளல், நட்புறவு, உலக சமாதானம் என்பதற்கு அமைய உலக அமைதியை வலுப்படுத்தி உலக நாடுகளிடையே பரஸ்பர நல்லிணக்கங்களை உருவாக்கி மெய்யான சுதந்திரத்திற்கும், ஒடுக்குமுறையையும், இராணுவ வெறியையும், ஆக்கிரமிப்பையும் மனிதனின் வாழ்வில் இருந்து ஒழித்துக் கட்டுவதற்கும் அண்மையில் நடைபெற்ற 12வது இளைஞர்களதும், மாணவர்களதும் விழாவில் மாணவர்களும் இளைஞர்களும் திடசங்கற்பம் பூண்டார்கள். ●

# புரட்சிப் போர்

● லெனின் ராஜா




வன்னி மண்ணிலே போர்;
வாழ்வு தனைக் காக்கும் போர்;
எண்ணற்ற ஏழைகளின் போர்;
ஏற்றத் தாழ்வு அகற்றும் போர்;
செங்குருதி சிந்துகின்ற போர்;
செத்து மடிகின்ற போர்;
கல்லறைகள் பேசுகின்ற போர்;
காலத்தால் உருவான போர்;
சிங்களத்துச் சிறுக்கி இங்கே வருகிறாள்;
சிரித்துக் குலுக்கி சிங்காரித்து வருகிறாள்;
சிப்பாய்களைச் சீறியெழச் செய்கிறாள்;
பரந்து வாழும் தமிழர்களைக் கொல்கிறாள்.
மனமறிந்து தவறு செய்யா ஏழைகள்;
மனம்பதறி ஊரை விட்டு ஓடுறார்;
அன்னை தமிழ்ப் பூமியெங்கும் பிணக்குவியல்
அடக்கப்பட்ட மக்களுக்கு மனக்குமுறல்.
தமிழன்னை விலங்கொடிக்க ஒரு பாதை,
தமிழ்மக்கள் புரட்சியென்னும் புதுப்பாதை,
புதுப்பாதை விடிவைநோக்கி விரிந்திடணும்
புரட்சியென்னும் கொடியெங்கும் உயர்ந்திடணும்.
ஏற்றத் தாழ்வு எங்கணுமே அகன்றிடணும்
எல்லோரும் சமமென்று தெரிந்திடணும்
பூவுலக சொர்க்கமங்கே பிறந்திடணும்
புரட்சியென்னும் நடைமுறையதைப்
புரிந்திடணும். ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# அதிகாலையின் அமைதியில்...!

பரீஸ் வஸீலியெவ்

(தொடர் நவீனம்)

லீஸா பிரீச்கினா இந்தப் பத்தொன்பது ஆண்டுகளாக எப்போதும் மறுநாள் பற்றிய உணர்விலேயே வாழ்ந்து வந்தாள். கண்கள் கூசும்படி ஒளி வீசும் இன்பம் பற்றிய பொறுக்க முடியாத முன்னுணர்வு ஒவ்வொரு நாள் காலையிலும் அவளைத் தகிக்கும். அதே கணத்தில் தாயாரின் சோர்வூட்டும் இருமல் களிகொண்டாட்டச் சந்திப்பை மறுநாளைக்குத் தள்ளிப் போட்டுவிடும். அழிக்காது, அடிக்கடி வெறுமே தள்ளிப் போட்டுவிடும்.

'நம் அம்மா செத்துப் போவாள்' என்று கடுமையாக எச்சரிப்பார் தகப்பனார்.

அவள் வீட்டுவேலையெல்லாம் செய்தாள். அதே சமயம் மறுநாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

இந்த மறுநாள் அவளுடைய கற்பனையில் தாயாரின் மரணத்தோடு ஒருபோதும் தொடர்பு கொண்டிருக்கவில்லை. தாயார் உடல் நலத்துடன் இருந்ததைச் சிரமத்துடன்தான் அவளால் நினைவுப்படுத்திக் கொள்ள முடிந்தது.

தகப்பனார் சலிப்பூட்டும் கடுமையுடன் ஓயாமல் நினைவுபடுத்திக்கொண்டிருந்த சாவுக்கு மாறாக வாழ்க்கை எதார்த்தமான, உணரக்கூடிய விஷயமாக இருந்தது. அது ஒளிவீசும் மறுநாளில் எங்கோ மறைந்திருந்தது. காட்டின் ஒரு மூலையில் இருந்த இந்த எல்லைக் குடியிருப்பை விட்டு இப்போதைக்கு அது விலகிச் சென்றது. ஆனாலும் இந்த வாழ்க்கை நிலவுகிறது, தான் அதை அனுபவிக்கப் பிறந்தவள், மறுநாள் வரும்வரை காத்திராமல் இருக்க எப்படி முடியாதோ அப்படியே வாழ்க்கையை அனுபவிக்காமல் விடவும் முடியாது என்று லீஸா உறுதியாக நம்பினாள். காத்திருக்க லீஸாவால் முடிந்தது.

பதினான்காம் வயது முதல் மாதரின் இந்தப் பெருங்கலைகளைக் கற்க அவள் தொடங்கினாள். தாயாரின் நோய் காரணமாகப் பள்ளிப் படிப்பை விட நேர்ந்ததும், ஆரம்பத்தில் அவள் வகுப்புக்குத் திரும்பும் நாளை எதிர்பார்த்தாள். பின்னர் தோழிகளுடன் சந்திப்புக்காகக் காத்திருந்தாள். பிற்பாடு, அரிதாக ஒழிவு கிடைக்கும் மாலைகளில் பொழுது போக்குக் கழகத் திடலில் நடனம் ஆடும் வாய்ப்பை எதிர்பார்த்தாள், பின்பு...



பின்பு எதிர்பார்ப்பதற்கு எதுவுமே இல்லை என்ற நிலை அவளுக்குத் திடீரென ஏற்பட்டது. அவளுடைய தோழிகள் ஒன்றா இன்னும் படித்துக் கொண்டிருந்தார்கள், அல்லது அவளிடமிருந்து தொலைவில் வேலை செய்து வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்குச் சொந்த அக்கறைகள் இருந்தன. அவற்றில் லீஸாவின் ஈடுபாடு நாளாடைவில் அற்றுப் போயிற்று.

இவ்வாறு சென்றுவிட்டது அவளுடைய பிள்ளைப்பருவம். பழைய நண்பர்களும் அதோடு போய்விட்டார்கள். புதிய நண்பர்களும் ஏற்படவில்லை. இளவேனிலில் தகப்பனார் ஒரு வேட்டைக்காரரை அழைத்து வந்தார்.

'நம் வீட்டில் தங்க விரும்புகிறார்' என்று மகளிடம் கூறினார் தந்தை.

தகப்பனாரும் விருந்தாளியும் சமையல் அறையில் உட்கார்ந்து வெகுநேரம் வரை வோத்கா குடித்துக் கொண்டிருந்தார்கள்.

தகப்பனார் தாம் அதிகமாகப் பேசினார்கள்.

'நீ பொறு தம்பீ, பொறு. வாழ்க்கை காட்டைப் போல. அதை வெட்டிச் சுத்தப்படுத்துவது அவசியம். அப்படித்தானே சொல்கிறாய்? பொறு. பட்டுப் போன மரம், நோய்ப்பட்ட அடிமரங்கள், புதர்கள் எல்லாவற்றையும் அப்படித்தானே?'

'சுத்தப்படுத்த வேண்டும். வெட்ட வேண்டாம், சுத்தப்படுத்த வேண்டும். களைகளை வயலிலிருந்து பிடுங்கி எறிய வேண்டும்' என்றார் விருந்தினர்.

'சரி' என்றார் தகப்பனார். 'சரி, பொறு. காடு என்றால் காட்டுக் காவலர்களான எங்களுக்குப் புரிகிறது. இதை நாங்கள் புரிந்து கொள்வோம், இது காடு என்பதால், ஆனால் இது பிராணி என்றாலோ? இதில் உயிர்ச் சூடு இருக்கிறது, இது ஓடுகிறது, கத்துகிறது என்றாலோ?'

'ஓநாய் என்று வைத்துக் கொள்வோம், உதாரணத்துக்கு...'

'ஓநாயா?' என்று சிலுப்பிக் கொண்டு கிளம்பினார் தகப்பனார். 'ஓநாய் உனக்கு இடைஞ்சலாய் இருக்கிறதா? ஏன் இடைஞ்சலாய் இருக்கிறது? எதனால்?'

'எதனால் என்றால், அதனிடம் பற்கள் இருப்பதால்தான்' என்று புன்னகைத்தார் வேட்டைக்காரர்.

'ஓநாயாகப் பிறந்தது அதன் குற்றமா என்ன? அது குற்றவாளியா? இல்லை, தம்பீ, நாம் தான் அதைக் குற்றவாளி ஆக்கிவிட்டோம். அதைக் கேளாமலே அதைக் குற்றவாளி ஆக்கிவிட்டோம். இது மனச்சான்றுக்கு அடுக்குமா?'

'இதோ பாருங்கள், ஓநாயும் மனச்சான்றும் ஒன்றுக்கொன்று பொருந்தாத வார்த்தைகள்'.

'பொருந்தாதவையோ? ஊம், ஓநாயும் முயலும் பொருந்துபவை தாமா? கனைக்காதே, பொறு தம்பீ!... நல்லது ஓநாய்கள் மக்களின் பகைவர்கள் என்று எண்ணும்படி உத்தரவு ஆயிற்று. சரி, நாம் அவற்றை ஒழிக்கும் வேலையில் ஒருமித்து ஈடுபட்டோம், ருஷ்யா முழுவதிலும் இருந்த ஓநாய்கள் எல்லா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வற்றையும் எல்லா மக்களுமாகச் சேர்ந்து சுட்டுக் கொன்று விட்டோம் என்று வைத்துக்கொள்! எல்லா ஓநாய்களையும் கொன்றுவிட்டோம்! அப்புறம் என்ன ஆகும்??

'ஆவது என்ன? வேட்டைக்கு நிறைய விலங்குகள் கிடைக்கும்' என்று புன்னகை செய்தார் வேட்டைக்காரர்.

'குறைவாக!...' என்று கத்தி, மயிரடர்ந்த முஷ்டியால் பெரிய மேஜை அதிரும்படி ஓங்கிக் குத்தினார் தகப்பனார். 'குறைவாகவே கிடைக்கும், புரிகிறதா உனக்கு? விலங்குகள் ஆரோக்கியமாய் இருப்பதற்கு ஓட வேண்டும். ஓட வேண்டும், தம்பீ, புரிந்ததா? ஓடுவதற்குத் திகில் வேண்டும். வேறு விலங்கு அடித்துத் தின்றுவிடுமோ என்ற பயம் வேண்டும். ஆமாம். ஒரே மாதிரிப் பிராணிகள் மட்டுமே வாழும்படி ஏற்பாடு செய்யலாம் தான். அது முடியும். ஆனால் எதற்காக? அமைதிக்காகவா? அப்போது முயல்கள் கொழுப்பேறிச் சோம்பேறிகள் ஆகிவிடும். உழைப்பதை நிறுத்திவிடும், ஓநாய்கள் இல்லாததால். பிறகு? சொந்தமாக ஓநாய்களை வளர்க்கத் தொடங்குவோமா அல்லது வெளிநாடுகளிலிருந்து விலைக்கு வாங்குவோமா—பயம் உண்டாக்குவதற்காக?'

'ஆமாம், நீர் பணக்கார விவசாயியாய் இருந்தீரோ? உம் உடைமைகள் பறிக்கப்பட்டு விட்டனவோ?' என்று திடீரென அமைதியாக வினாவினார் விருந்தாளி.

'என் உடைமைகளாவது, பறிப்பதாவது? என்னிடம் இருந்த உடைமை எல்லாம் இரண்டு கைகளும் வீட்டுக்காரி-



யும் மகளும்தான். என் உடைமையைப் பறிப்பதில் அவர்களுக்கு லாபம் இல்லை'.

'அவர்களுக்கா?'

'சரி, நமக்கு என்று வைத்துக் கொள்ளேன்!' தகப்பனார் குவளையில் வோத்கா ஊற்றி, விருந்தாளியின் குவளையோடு தம் குவளையைச் சம்பிரதாயப்படி மோதினார். 'நான் ஓநாய் அல்ல, முயல்' என்றுகூறி வோத்காவைப் பருகி மேஜையை ஓசையுடன் நகர்த்திவிட்டு எழுந்தார். அடர் தாடி மீசையும் பரட்டைத் தலையுமாக அவர் கரடி போலக் காட்சி அளித்தார். கதவுவரை சென்று நின்றார். 'நான் தூங்கப் போகிறேன். உனக்கு மகள் வழி காட்டுவாள்' என்றார்.

'லீஸா ஒரு மூலையில் அமைதியாக உட்கார்ந்திருந்தாள். வேட்டைக்காரர் நகரவாசி, பளிச்சிடும் வெண்பற்கள் கொண்ட இளைஞர். இது அவளுக்குக் கூச்சம் உண்டாக்கிற்று. அவரையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தவள், அவளுடைய பார்வையைச் சந்திக்க நேருமோ என்று பயந்து சமயத்தில் கண்களைத் திருப்பிக் கொண்டாள். அவர் பேசத் தொடங்குவார், நம்மால் பதில் சொல்ல முடியாது, அல்லது அசட்டுத்தனமாக ஏதேனும் சொல்லி வைப்போம் என்று அஞ்சினாள்.

'அவர் செம்படைக்கொரில்லா வீரர்' என்று சட்டெனக் கூறினாள் லீஸா.

'அது எங்களுக்குத் தெரியும்' என்று புன்முறுவலுடன் சொல்லி எழுந்தார் விருந்தாளி. 'என்னைத் தூங்கும் இடத்துக்கு அழைத்துப் போங்கள், லீஸா.'

தீனிப்புல் பரண் நிலவறை போல இருள் அடர்ந்திருந்தது. லீஸா கதவருகே நின்றாள், சற்று யோசனை செய்தாள்; கனத்த ஆட்டுத்தோல் கோட்டையும் தலையணையையும் விருந்தாளியிடமிருந்து வாங்கிக் கொண்டாள்.

'கொஞ்ச நேரம் இங்கே நில்லுங்கள்.

ஆட்டங்கண்ட ஏணியில் ஏறி மேலே போய், தீனிப்புல்லை மேல் கீழாக மாற்றிப் பரப்பி, படுக்கையைத் தயார் செய்தாள் லீஸா. அவர் உறங்கப் போனார்.

ஒவ்வொரு நாளும் காலையில் விருந்தாளி வீட்டிலிருந்து வெளியேறிவிடுவார். இருட்டும் தருவாயில்தான் திரும்பி வருவார். லீஸா அவருக்கு உணவு பரிமாறுவாள். அவர் விரைவாக, ஆனால் பேராசைப்படாமல் சாப்பிடுவார். இது லீஸாவுக்குப் பிடித்திருந்தது. சாப்பிட்டானதுமே அவர் தீனிப்புல் பரணுக்குப் போய்விடுவார். புல்லைப் பரப்பி விரிப்பது மேற்கொண்டு தேவைப்படவில்லை ஆதலால் லீஸா வீட்டிலேயே இருந்துவிடுவாள்.

'நீங்கள் வேட்டையிலிருந்து ஒன்றும் கொண்டு வருவதில்லையே ஏன்!' என்று ஒருநாள் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு கேட்டாள் லீஸா.

'வேட்டை கிடைக்க மாட்டேன் என்கிறது' என்று அவர் புன்னகை செய்தார்.

'இளைத்துப் போனதுதான் மிச்சம். இதுவும் ஓய்வு ஆகுமா?' என்று அவரைப் பாராமலே சொன்னாள் அவள்.

# ஈழ நாட்டில்

● புவிநேசன்

மறக்க முடியா
மனப் பதிவுகளாய்
எனது நாட்டில்
நடக்கும் கொடுமைகள்!
கரை கடந்தாலும்
அந்தக் 'கடுமைகள்'
கனதியாக
எனது மனதில்
நிற்கின்றன.
சித்திரவதையால்
சிதைந்துபோகின்றன
இளமைகள்!
பீதியினால்
அறிவு அங்கு
சூனியமாகிறது!
நகரத் தெருக்களில
முகங்களைக் காணலாம்!
ஒளி இழந்த
வண்ணமாய்
நகரத்தைக் கடக்கவே
வழி பார்க்கும்
அந்த முகங்கள்!
ராணுவ முகாம்களில்
ரணமாகின்றன
வாலிப உடல்கள்
மரணத்தைக் காத்திருப்பது
போலவே இருப்பர்
மனிதர்கள்!
உறவினரைக் காணாவிடில்
பிணங்களையே தேடும்
இதயங்கள்!
இளங் குருத்துகளின்
தாக்குதலால்
பீதியே மிச்சம்!
மக்கள் எழுதல்
எப்போது நிகழும்!

●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

'இது அருமையான ஓய்வு லீஸா' என்று பெருமூச்சு விட்டார் விருந்தாளி. 'அதுவும் முடிந்துவிட்டதுதான் வருத்தம் அளிக்கிறது. நாளை போய் விடுவேன்.'

'நாளைக்கா' என்று ஈன சுரத்தில் வினாவினாள் லீஸா.

'ஆமாம், காலையில். ஒரு பிராணியைக் கூடச்சுடவில்லை. வேடிக்கை இல்லையா?'

'வேடிக்கைதான்?' என்று துயரம் ததும்ப உரைத்தாள் லீஸா.

அதற்கு மேல் அவர்கள் பேசிக் கொள்ளவில்லை. ஆனால் அவர் போனதுமே லீஸா சமையலறையை ஏனோ தானோவென்று ஒழுங்குபடுத்திவிட்டு முகப்புக்கு ஓடிச் சென்றாள். வெகுநேரம் சவுக்கையைச் சுற்றிச் சுற்றி வந்தாள். விருந்தாளி மூச்சு விடுவதையும் இருமுவதையும் கேட்டாள். விரல் நகங்களைக் கடித்தாள். பின்பு சவுக்கைக் கதவை ஓசைப்படாமல் திறந்து, எண்ணம் மாறிவிடுமோ என்ற அச்சத்தால் விரைவாகத் தீனிப் புல் பரண் மேல் ஏறினாள்.

'யார் அது?' என்று தணிந்த குரலில் கேட்டார் விருந்தாளி.

'நான்தான்' என்றாள் லீஸா. 'விரிப்பை ஒருவேளை சரிப்படுத்த வேண்டுமோ...'

'வேண்டாம்' என்று அவளை இடைமுறித்தார் விருந்தாளி. 'போய்த்தூங்கு'.

தீனிப் புல் பரணின் புழுக்கம் நிறைந்த இருட்டில் அவருக்கு மிக நெருக்கமாக உட்கார்ந்து மௌனமாய் இருந்தாள் லீஸா. அவள் முழுமுயற்சியுடன் அடக்கிக் கொண்ட பெருமூச்சு அவர் காதில் பட்டது.

'என்ன சலிப்பாய் இருக்கிறதா?'

'ஆமாம்' என்று அனேகமாக வாய்க்குள் முனகினாள் லீஸா.

'சலிப்பாய் இருந்தாலும் கூட மடத்தனம் செய்வது சரி அல்ல'.

அவர் புன்னகை செய்வதாக லீஸாவுக்குத் தோன்றியது. அவளுக்கு எரிச்சல் மண்டியது. அவர்மேலும் தன் மேலும் வெறுப்பு உண்டாயிற்று. ஆனாலும் உட்கார்ந்திருந்தாள். எதற்காக இங்கே வந்தோம்? ஏன் உட்கார்ந்திருக்கிறோம்? என்பது அவளுக்குத் தெரியவில்லை. அவள் தனியவளாய் இருந்தாள். தனிமைக்குப் பழகியிருந்தாள். எனவே அவள் அனேகமாக ஒருபோதும் அழுதது கிடையாது. தன்மேல் யாரேனும் பரிவு காட்ட வேண்டும் என்று இப்போது அவளுக்கு அடக்க முடியாத விருப்பம் உண்டாயிற்று. யாரேனும் அன்பு ததும்பும் சொற்களைக் கூற வேண்டும். தலையை வருட வேண்டும். தேற்ற வேண்டும், ஒருவேளை, முத்தமிடவும் வேண்டும் (இதை அவள் தனக்குத் தானே கூட ஒப்புக்கொண்டிருக்க மாட்டாள்) என்று அவள் ஆசைப்பட்டாள். ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் தாயார் தன்னைக் கடைசி முறையாக முத்தமிட்டாள் என்றும், தான் எதன் பொருட்டு உலகில் வாழ்ந்தாளோ அந்த இன்பமயமான மறுநாளுக்கு உத்தரவாதமாக இந்த முத்தம் இப்போது தனக்கு வேண்டும் என்றும் அவளால் சொல்ல முடியாதே.

'போய்த் தூங்கு. நான் களைத்துப் போனேன். நான் அதிகாலையில் புறப்பட வேண்டும்'.



இவ்வாறு கூறிக் கொட்டாவி விட்டார் விருந்தாளி. நீண்ட, அசட்டை நிறைந்த, ஊளை ஒலியுள்ள கொட்டாவி. லீஸா உதடுகளைக் கடித்துக் கொண்டு தடதடவென்று இறங்கியவள் கதவில், முழங்காலை இடித்துக் கொண்டாள். வலியைப் பொறுத்துக் கொண்டு வெளியே போய்ப் படீர் என்று கதவைச் சாத்திவிட்டு முகப்புக்கு ஓடினாள்.

காலையில் தகப்பனார் குதிரையை வண்டியில் பூட்டியதையும் விருந்தாளி தாயாரிடம் பிரிவு சொல்லிக் கொண்டதையும் வெளிக்கதவுகள் கிரீச்சிட்டதையும் கேட்டாள் லீஸா. உறங்குபவள் போன்று பாவனை செய்தவாறு படுத்திருந்தாள். மூடிய இமைகளின் அடியிலிருந்து வழிந்தன கண்ணீர்த்துளிகள்.

மதியச் சாப்பாட்டு நேரத்தில் தகப்பனார் குடித்து விட்டுத் திரும்பினார். வெண் நீலச் சர்க்கரைக் கட்டிகளைத் தொப்பியிலிருந்து ஓசையுடன் மேஜைமேல் கொட்டினார்.

'நம் விருந்தாளி பெரிய ஆளாக்கும்!' என்று ஆச்சரியம் தொனிக்கக் கூறினார். 'நமக்குச் சர்க்கரை கொடுக்கும்படி உத்தரவிட்டான். நம்முடைய உள்ளூர் கடையில் ஒரு வருஷமாகச் சர்க்கரையே தட்டுப்படவில்லை. அவனோ, முழுதாக மூன்று கிலோ கொடுக்கச் சொல்லி விட்டான்!...'

பிறகு அவர் பேச்சை நிறுத்தி விட்டு, வெகுநேரம் பைகளைத் தட்டிப் பார்த்து, புகையிலைப் பையிலிருந்து கசங்கிய காகிதத் துண்டை எடுத்து அவளிடம் கொடுத்தாள்.

லீஸா வாங்கிப் படித்தாள் :

'நீ பள்ளியில் கற்க வேண்டும், லீஸா. காட்டில் உன் வாழ்க்கை பாழாகிவிடும். ஆகஸ்டு மாதம் வா. தங்கு விடுதியுள்ள தொழிற் பள்ளியில் சேர்க்கிறேன்.'

கையெழுத்தும் முகவரியும் மேற்கொண்டு ஒன்றும் இல்லை. வணக்கம் கூட இல்லை.

ஒரு மாதத்திற்கெல்லாம் தாயார் காலமானாள். எப்போதுமே கடுகடுத்த முகத்துடன் இருந்த தகப்பனார் இப்போது காட்டு விலங்கு ஆகி விட்டார். கண்தலை தெரியா




www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மல் குடித்தார். லீஸாவோ, முன்போலவே மறுநாளை எதிர் பார்த்தாள். இரவில் தகப்பனாரின் நண்பர்களிடமிருந்து தப்புவதற்காக அறைக் கதவை நன்றாகப்பூட்டிக் கொண்டாள். ஆனால் அப்போது முதல் அந்த மறுநாள் ஆகஸ்டு மாதத்துடன் நெருக்கமாக இணைந்து விட்டது. அறைச் சுவரின் மறுபுறம் குடிகாரர்களின் கூச்சல்கள் கேட்கையில் லீஸா முற்றிலும் நைந்துபோன கடிதத்தை ஆயிரமாவது தடவை மறுபடி படிப்பாள்.

ஆனால் போர் மூண்டு விட்டது. லீஸா நகரத்துக்குப் போவதற்குப் பதில் தற்காப்பு வேலையில் ஈடுபட்டாள். கோடைக்காலம் முழுவதும் அகழ்களும் டாங்கித் தடுப்பு அரண்களும் அமைத்துக் கொண்டிருந்தாள். ஜெர்மனியர் இவற்றைச் கணக்காகச் சுற்றிக் கடந்து விட்டார்கள். லீஸா பகைவரின் முற்றுகையில் அகப்பட்டுக் கொண்டாள். அதிலிருந்து தப்பி வெளியேறி மீண்டும் அகழ்கள் தோண்டலானாள். ஒவ்வொரு தடவையும் மேலும் மேலும் கிழக்கே பின்வாங்கியவாறு அகழ்கள் தோண்டினாள். இலையுதிர் கால முடிவில் அவள் வல்தாய் என்னும் இடத்துக்கு அப்பால் இருந்தாள். அங்கே விமான எதிர்ப்புப் படைப்பிரிவில் ஒண்டிக் கொண்டாள். இந்தக் காரணத்தால்தான் இப்போது 171வது கிளை நிலையத்துக்கு ஓடிக் கொண்டிருந்தாள்...

லீஸாவுக்கு வஸ்கோவை எடுத்த எடுப்பிலேயே பிடித்து விட்டது. உறக்கக் கலக்கம் போகாத விழிகளைக் குழப்பத்துடன் கொட்டியவாறு அவர்களுடைய அணி வரிசையின் முன் நின்றானே, அப்போதே. அவனுடைய உறுதியான, மிதமான பேச்சு, விவசாயிக்குரிய நிதானப் போக்கு, குடும்பம் நிலைத்திருப்பதற்கு உத்தரவாதம் என்று எல்லாப் பெண்களும் மதிக்கும் ஆண்மை மிடுக்கு எல்லாமே அவளுக்குப் பிடித்திருந்தன. தற்செயலாக எல்லாப் பெண்களும் கமாண்டரைக் கேலி செய்யத் தொடங்கினார்கள். அப்படிச் செய்வது முறையானது என்று எண்ணப்பட்டது. இந்த மாதிரிப் பேச்சுக்களில் லீஸா கலந்து கொள்ளவில்லை. ஆனால் எல்லாம் அறிந்த கிரியனவா சிரித்துக் கொண்டு சொன்ன ஒரு சேதி அவளுக்கு ஆத்திரம் ஊட்டியது. வீட்டுச் சொந்தக்காரியின் பகட்டுக்கும் மினுக்குக்கும் வசப்படாமலிருக்க சார்ஜண்டு மேஜரால் முடியவில்லை என்றாள் கிரியானவா.

'இது உண்மை அல்ல!' என்ற சொற்கள் லீஸாவிடமிருந்து வெடித்துக் கிளம்பின.

'காதல் கொண்டு விட்டாள்!' என்று வெற்றிக் குரலில் முழங்கினாள் கிரியானவா. 'பெண்களே, நம் லீஸா காதலில் மூழ்கி விட்டாள்! காமாண்டருக்கு உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டாள்!'

'பாவம் லீஸா!' என்று உரக்கப் பெருமூச்செறிந்தாள் சோனியா.

உடனே எல்லோரும் சளசளக்கவும் உரக்கச் சிரிக்கவும் தொடங்கினார்கள். லீஸா வீரிட்டுக் காட்டுக்கு ஓடி விட்டான்.

வெட்டு மரக்கட்டைமேல் உட்கார்ந்து தேம்பி அழுது கொண்டிருந்தாள், பின்பு ரீதா



அஸ்யானினா அவளைத் தேடிக் கொண்டு வந்தாள்.

'என்ன நீ, அசடே? சகஜமாக வாழ வேண்டும். புரிந்ததா? சகஜமாக.'

ஆனால் லீஸா கூச்சத்தால் தலையை நிமிர்த்த முடியாமல் இருந்தாள். சார்ஜண்டு மேஜருக்கோ மூச்சுவிட நேரமின்றி வேலை நெரிந்தது. இந்த வாய்ப்பு கிடைக்காதிருந்தால் லீஸா அவனை நேரிட்டுப் பார்த்தே இருக்க மாட்டாள். அதனால்தான் லீஸா சிறகுகள் முளைத்தவள் போலக் காட்டின் வழியே பறந்து சென்றாள்.

'அப்புறம் சேர்ந்து பாடுவோம் லீஸா. இந்த இராணுவ உத்தரவை நிறைவேற்றின பிறகு பாடுவோம்...' என்று சொல்லியிருந்தான் சார்ஜண்டு மேஜர்.

லீஸா அவனுடைய சொற்களை எண்ணிப் பார்த்துப் புன்னகைத்தாள். தன் உள்ளத்தில் திடீர் திடீரென்று எழுந்து விகுவான கன்னங்களைக் குப்பென்று சிவக்கச் செய்யும் விறல் மிக்க, விந்தையான உணர்ச்சியால் கூச்சம் அடைந்தாள் அவள். அவனைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்ததால் அடையாள தேவதாரு மரத்தைக் கடந்து போய்விட்டாள். சதுப்பு நிலத்தின் அருகே கொம்புகளின் நினைவு வந்த போது அவளுக்குத் திரும்பிப் போக விருப்பம் இல்லை. அங்கே புயலில் விழுந்த மரங்கள் நிறைய இருந்தன. லீஸா பொருத்தமான ஒரு தடியைச் சீக்கிரமாக எடுத்துக் கொண்டாள்,

## யாக பூமி

★ மதுரா

எங்கள் பூமி
யாக பூமி!
சுதந்திர தேவியை
வரவழைப்பதற்காக
யாககுண்டத்தில்
இளைஞர் இரத்தம்
சொரியப்படுகிறது!

இளைஞர்கள் உதிரத்தை
மட்டுமல்ல,
உடல்களைக்கூட
அமுத சுரபிகளில்
அமிர்தமாய்
அரக்கர்கள்
உண்டுகளிக்கின்றனர்.

காலம் காலமாய்
கிலிகொண்டு
அடங்கியிருந்தவர்கள்
இப்போதுதான்
போராடப்
புறப்பட்டிருக்கிறார்கள்.

போகம் விழைந்த
பூமி எங்கும்
யாகவிளைச்சலுக்காய்
உதிரம்
பாய்ச்சப்பட்டுள்ளது.

சுதந்திர
அறுவடைக்காய்
காத்திருக்கும்
இவர்கள் —
நாளைய —
சுதந்திர புருஷர்கள்.

www.tamilarangam.net



கொழுகொழு வென்றிருந்த சேற்றுக் குழம்பலில் இறங்கு வதற்குமுன் அவள் இரகசியமாக உற்றுக் கேட்டாள். பின்பு ஸ்கர்ட்டைக் கழற்றினாள்.

அதைத் தடியின் உச்சியில் சுற்றிக் கட்டினாள். உடுப்பை இடைவாரில் கவனமாகச் செருகிக் கொண்டாள். உள்கால் சட்டையைத் தூக்கி விட்டுக் கொண்டு சதுப்பு நிலத்தில் இறங்கினாள்.

நடப்பது முன்னிலும் கடினம் ஆயிற்று. புதைசேறு முழங்கால் வரை வந்தது. ஆனால் இப்போது ஒவ்வொரு அடிவைப்பும் எதிர்க்கரையை அருகே கொண்டு வந்தது. சார்ஜண்டு மேஜர் எந்த வெட்டு மரத்திலிருந்து சேற்றில் இறங்கினானோ அதை வெடிப்பு உள்படத் தெளிவாகக் கண்டாள் லீஸா. வேடிக்கை யாக, தத்தக்க பித்தக்க என்று இறங்கினாள். விழாமல் நிற்பதற்குள் திணறிப் போய்விட்டாள்.

லீஸா மறுபடி வஸ்கோவைப் பற்றி எண்ணத் தொடங்கினாள். புன்சிரிப்புக்கூடச் செய்தாள். அவர்கள் சேர்ந்து பாடுவார்கள்.. சார்ஜண்டு மேஜர் இராணுவ உத்தரவை நிறைவேற்றி விட்டுக் கிளை நிலையம் திரும்பியதும் லீஸாவும் அவனும் கட்டாயம் சேர்ந்து பாடுவார்கள். லீஸா மட்டும் தந்திரம் செய்ய வேண்டியிருக்கும். தந்திரம் செய்து அவனை மாலையில் காட்டுக்கு அழைத்துப் போக வேண்டிவரும். அங்கே... பார்ப்போம், யார் அதிக பலசாலி, லீஸாவா அல்லது சார்ஜண்டு மேஜரோடு ஒரே வீட்டில் வசிப்பது ஒன்றை மட்டும் பெருமையாகக் கொண்ட வீட்டுச் சொந்தக்காரியா என்று...


பிரமாண்டமான பழுப்புக் குமிழி அவளுக்குமுன் உப்பியது. இது முற்றிலும் எதிர்பாராத போது, மிக விரைவாக, மிக அருகில் நிகழ்ந்ததால் லீஸாவுக்குக் கத்தக்கூட நேரமில்லை. அவள் இயல்பாகவே ஒருபக்கம் விலகினாள். அவள் விலகியதெல்லாம் ஓர் அடிதான், ஆனால் கால்கள் அக்கணமே ஆதாரத்தை இழந்து, துவளும் வெறுமையில் எங்கோ தொங்கின. புதை சேறு மென்மையான இடுக்கிகளால் தொடைகளை நெரித்தது. வெகுநேரமாக உள்ளே சேர்ந்து கொண்டிருந்த திகில் நெஞ்சில் சுரீரெனப் பாய்ந்து தாக்கியவாறு திடீரென வெளிப்பட்டது. எப்படியாவது நிலைத்து நின்று புதை சேற்றிலிருந்து வெளியேறி விட முயன்றவாறு லீஸா தடியின்மீது முழுச்சுமையையும் வைத்து அழுத்தினாள். உலர்ந்த சுழி சடசடத்து முறிந்தது. சில்லிட்ட சேற்றுக் குழம்பில் முகம் குப்புற விழுந்தாள் லீஸா.

தரை இல்லை. கால்கள் மெதுவாக, பயங்கரமான அளவுக்கு மெதுவாக, கீழே இழுப்பட்டன. கைகள் அர்த்தமின்றிப் புதைச் சேற்றைத் துழாவின. லீஸாவுக்கு மூச்சு முட்டியது. அவள் குழம்பல் சேற்றில் நெளிந்தாள். கடவைப் பாதை எங்கோ மிக அருகில், ஓர் அடி, அரை அடி தூரத்தில் இருந்தது. ஆனால் இந்த அரை அடி கூட எடுத்து வைக்க இப்போது அவனால் முடியவில்லை.

'உதவுங்கள்! உதவி! உதவி செய்யுங்கள்!'

(தொடரும்)





# சுதந்திர அடிமைகள்

உக்ரதுண்டர்

இரவின் பனித்துளி கரையும் அதிகாலை வேளை
பகலின் ஒளிவெள்ளம் பகலவன் வழங்க
தரணியெங்கும் புதுப் பொலிவு!

சுதந்திரத்துக்காய்ச் சுகங்களைத் துறந்தவன்.
'சுதந்திர அடிமைகள்' 'சுதந்திரம்' அறியாது
அறியாமையில் மூழ்கிக் கிடைக்கையில்
விடுதலை பற்றிய விளக்கம் கொடுத்தவன்
விறல்மிகு தோள்களைத் தட்டிக் கொடுத்தவன்
இப்போது இருளில் இப்படி...

விடுதலை பற்றிய உணர்வே இல்லாமல்
அதிகாலைக் கனவுபோல் தமிழீழம் மலரும் என்று
கனவு கண்டுகொண்டிருந்த — இந்தச்
'சுதந்திர அடிமைகள்' —
தாமும் போராளிகளாய்க் களம் புகுந்தால் மட்டுமே
விடுதலை சாத்தியம் என்ற —
கருத்தினைக் கொண்டு களம்புக வேண்டினான்!

'தூக்கம் —
சோகம் தாங்காத துக்கத்தின் தவிப்பு,
மரணத்தின் ஒத்திகை, மனிதனின் முடிவு!'
என்று தத்துவம் பேசிவிட்டு,
மறுபடியும் துக்கமான தூக்கத்தில்
ஆழ்ந்தனர் மக்கள்!

'விடுதலை வேட்கையும்' — இப்படிக்
கனவுகளாய்ப் போய்விடும் என்று
அஞ்சும் அவன் முக இருள்
விலகும் நாள் —

தமிழீழத் தரணியெங்கும் அணிதிரண்டிருக்கும்
மக்கள் எழுற்சியின் —
மகத்தான வரலாற்றை எழுதப்போகும்
நாளாக மட்டுமே இருக்கும்.


www.tamilarangam.net





# அவள் அதிசயமானவள்

"விஜி"



வட இலங்கையின் ஒரு மூலையில் அமைந்துள்ளது அக்கிராமம். அது பெயரளவில் தான் கிராமமேயொழிய பல வைத்தியர், பொறியியலாளர், ஆசிரியர்களை ஈன்ற பெருமை அதற்கே உரியது.

புலர்ந்தும் புலராத ஒரு நாளின் விடிகாலைப்பொழுது. மௌனத்தில் சயனித்துக் கொண்டிருந்தது அந்த ஊர். அந்த ஊரை நோக்கி இராணுவ ட்ரக்குகளும், கவசவாகனங்களும், கவச வண்டிகளும் முன்னேறுகின்றன. குறுகிய நேரத்துக்குள் அந்த அப்பாவிக்கிராமம் நூற்றுக்கணக்கான அரச கூலிப்படையினரால் சுற்றிவளைக்கப்படுகின்றது. ஒலிபெருக்கி மூலம் தம் வருகையை மக்களுக்குத்தெரியப்படுத்துகின்றான் அவர்களின் தலைவன்.

மக்கள் ஒருகணம் செய்வதறியாது திகைக்கின்றனர். ஆனாலும் அந்த ஊரில் தங்கியிருந்த விடுதலைப் போராளிகள் அனைவரும் முதல்நாளிரவே இடம் பெயர்ந்துவிட்டமையால் அவர்களின் மனதில் நிம்மதி தோன்றுகிறது. அந்த நேரத்திலும் தம் நகைகள், பணங்களை ஒளிப்பவர்களும், நோட்டீஸ்களை எரிப்பவர்களும், அடையாள அட்டைகளைக் கிண்டுபவர்களுமாக ஒரு சிலர் பரபரத்தபடி இருக்கின்றனர்.

தந்தை, தாய், இளம்மகள் ஆர்த்தியை மட்டுமே கொண்ட ஒரு வறிய குடிசையினுள்ளே நுழைகிறார்கள் சில இராணு

www.tamilarangam.net


வத்தினர். வழக்கமான அவர்களது காட்டுமிராண்டித்தனமான தேடுதல் வேட்டையை நடத்திவிட்டு, எந்த ஆதாரமும் கிடையாத ஏமாற்றத்துடன் வெளியேறுகின்றனர்.

அவர்களுடன் வந்த கப்டன் மட்டும் வெளியேறாமல் அங்கு நிற்கிறான். அவன் ஆர்த்தியைப்பார்த்து சிறிது தேநீர் கேட்கிறான். அவள் தன் தந்தையைப் பார்க்கிறாள். அவரின் தலையசைப்பை சம்மதமாகப்பெற்று தேநீர் தயாரிக்க உள்ளே செல்கிறாள். தேநீருக்குள் சிறிது நஞ்சைப்போடலாமா என நினைத்து, உடனேயே தன் நினைப்பை மாற்றிக் கொள்கிறாள். காரணம் அந்த கப்டன் ஒரு தமிழன் எனக் கூறியிருந்தான். ஆனாலும் அவன் யாராயிருந்தாலும் அவனைக் கொலைபண்ண நாம் நினைத்தால், அவர்கட்கும் எமக்கும் வித்தியாசம் இருக்க முடியாதே! என அவள் மனம் விழித்துக் கொள்கிறது.

தேநீரைக் குடித்து முடித்த பின்பும் அவன் அங்கிருந்து போவதாயில்லை. தமது படையினரின் தேடுதல் முடியும்வரை தான் அங்கு இருக்கப்போவதாக கேட்கிறான். வேறுவழியின்றித் தந்தையும் சம்மதிக்கிறார். அவன் தன் பெயர் ராஜன் எனவும், தன் ஊர் கொழும்பு எனவும் தான் பிறந்தது, வளர்ந்தது, படித்தது எல்லாமே சிங்களவர்களுடன் என்பதால் தானும் கிட்டத்தட்ட ஒரு சிங்களவன் தான் என்கிறான். அவனுடைய கதை இவற்றையும் மீறி நாட்டுநிலைமை, பயங்கரவாதம் எனப் படர்ந்த போது அனைவரும் மறுபேச்சின்றி மௌனமாகக் கேட்டபடி நிற்கின்றனர். அவன் ஒரு தமிழன் எனக் கூறிக்கொண்டு, கொடுங்கோலர்களை ஆதரிப்பதை ஆர்த்தியின் மனம் வெறுத்தது.

சுமார் இரண்டு மணி நேரத்தின் பின்பு அவனுடைய பேச்சு ஆர்த்தியைப் பற்றி திரும்புகிறது. சிறிய குடிசையாதலால் ஒளிய இடமின்றி, அவள் குசினிக்குள் சென்றுவிடுகிறாள். அவள் பெற்றோரின் மனம் பதைக்கத் தொடங்குகிறது. எந்த அநியாயத்தையும் நேரடியாகவே செய்து பழக்கப்பட்டமையால், அவன் நேரடியாகவே கேட்கிறான். "உங்கள் மகளை நான் விரும்புகிறேன். அவளைத் திருமணம் செய்துகொள்ள உங்கள் சம்மதம் தேவை. என்னைப் பார்த்த பின்பும் மறுக்க மாட்டீர்களென நினைக்கிறேன்."

அவன் எளிதாகக் கேட்டுவிட்டான். ஆனால் அந்த பெற்றோரின் மனங்கள் துடிக்கின்றன. இதற்கு நாம் சம்மதித்தால் ஊரில் வாழவோ, தமிழன் என்று சொல்லவோ எமக்கு யோக்கியதை இல்லை. சம்மதிக்காவிட்டால், ஆயுதபாணியாக நிற்கும் இவன் ஒரே மகளை அவமானப்படுத்தி விட்டால் என்ன செய்வது? பத்திரிகைகள் மூலம் இராணுவத்தின் அத்துமீறல்களை அறிந்திருந்த தந்தை தவிக்கிறார். கடைசியில் என்னவும் ஆகட்டும் என்று நினைத்தபடி, "Mr. ராஜன். உங்கள் அழகு, பணம், அந்தஸ்து, பதவிக்கு எத்தனையோ பெண்கள் கிடைப்பார்கள். எமக்கு இப்படி மாப்பிள்ளை கிடைக்கப் புண்ணியம் செய்திருக்கவேண்டும். ஆனாலும் இன்றைய நிலையில் ஒரு பிச்சைக்காரனுக்கு என் மகளைக் கொடுத்தாலும் உங்களுக்குத்தர முடியாது. ஏனென்றால் உங்கள் தொழில் எங்கள் இனத்துக்கே பொருந்தாதது. எனவே நீங்கள் மன்னிக்கவேண்டும்" என்று உணர்ச்சியைக் காட்டாமல் கூறி விடுகின்றார் அவர்.

ஆவேசம் கொண்டவனாய் ஸ்டூலை உதைத்துக் கொண்டே எழுகின்றான் ராஜன். "நீங்கள் இப்படிச் சொல்வீர்களென எதிர்பார்க்கவேயில்லை. எம்மைக் கண்டாலே ஓடி ஒளிந்த உங்களுக்கு, இவ்வளவு தூரம் கதைக்குமளவுக்கு இடம் தந்தது நான்தான். ஆரம்பத்திலேயே கேட்கிறமாதிரிக் கேட்டிருந்தால் இப்படி நான் அவமானப்பட நேர்ந்திராது.

## சிறுகதை

அன்றாடச் சாப்பாட்டுக்கே ஆலாய்ப்பறக்கும் உங்களுக்கு திமிருக்கு மட்டும் குறைச்சலில்லை. பெண்ணுக்குச் சீதனம் கொடுத்துச் சீர்செய்ய வக்கில்லை. இப்படிக் கனவிலும் எட்டாத மாப்பிள்ளை வரும் போது கொடுத்துத்தொலைக்கிறதுதானே. மறுக்குமளவுக்கு துணிவுவந்துவிட்டது என்ன?" மனிதாபிமானமற்ற இராணுவக் கர்ஜனையால் அந்தக் குடிசையே அதிருகிறது.

குசினிக்குள்ளிருந்தவாறு இவற்றைக் கேட்டபடிருந்த ஆர்த்திக்கு அவன் தம் குடும்ப நிலைமையைச் சந்திக்கிழுப்பது முறையாகப்படவில்லை. வேகமாக எழுந்து அவனிடம் வருகின்றாள். "இராணுவ கப்டன் அவர்களே! எம்மிடம்பணமோ, அந்தஸ்தோ இல்லைத்தான். ஆனால் நீங்கள் கேட்டவுடன் கொடுப்பதற்கு நாங்கள் சந்தையில் நிற்கும் ஆடுமாடுகளல்ல. அவைகூட மனிதர்தான் வாங்க முடியும். உங்களைப் போல வெறி பிடித்தவர்களால் அவற்றைக் கூட வாங்கமுடியாது. ஆகவே தயவுசெய்து எம் குடும்ப விவகாரத்தில் தலையிடாமல் நீங்கள் போவதே மேல்" ஆவேசமாக கூறி முடிக்கிறாள் ஆர்த்தி. தந்தையும் தாயும் வாயடைத்துவிடுகின்றனர். வெறிபிடித்த கப்டனின் கண்கள் மேலும் சிவக்கின்றன. துப்பாக்கியை உயர்த்திப்பிடிக்கின்றான். "தந்தையைவிட மகளுக்கு திமிர் அதிகம்தான். நீ இல்லையென்றால் என்னால் உன்னை அடையமுடியாதென்றா நினைக்கின்றாய்? இந்தக்கணமே உன்னை மானபங்கப்படுத்தவும் என்னால் முடியும். உன் சம்மதமின்றி உன்னை திருமணம் செய்யவும் என்னால் முடியும். தெரிகிறதா?" இரக்கமற்ற அவனின் குரல் நாரசமாய் ஒலித்தது.

ஆர்த்தி சிறிதும் பயமின்றி, துணிவுடன் "மன்னிக்கவேண்டும் உங்களால் என்னை மனைவியாக்கமுடியும். ஆனால் உங்களால் என்னுடன் ஒரு வாழ்க்கையை, சந்தோஷமாக அமைக்கமுடியாது. பதவியும் அதிகார வெறியும் உங்களிடம் இருக்கலாம். துப்பாக்கி முனையில் என் பெற்றோரை மிரட்டலாம். ஆனால் உங்கள் அதிகாரம் எம்மிடம் செல்லாது. தமிழனாய் பிறந்தும், தமிழனுக்கெதிராக துப்பாக்கி பிடிக்கின்ற உனக்கு மனைவியாவதைவிட,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



● பல்தேசியக் கவிதை

# கெரில்லாவின் பாடல்...

தமிழில்: புதுவை ஞானம்

எனக்கொரு காதலி இருந்தாள்...
ஒரு நள்ளிரவில்
இரக்கமற்ற காடையர் அவளைப்
பலவந்தம் செய்தழித்தார்கள்.
ஓ, காடே!
என்னுடைய காதலியாய் இரு.

எனது இதயத்தில்
கனலாய்க்கனிந்து
புனலாய்ப் பெருகி வரும்
காதல் வார்த்தைகளை
உன் காதுக்குள் முணுமுணுப்பேன்.
அதிகாலையில்
உனது பசிய கிளைகள்
மெதுவாய் அசைந்தென்னை
முத்தமிடட்டும்.

எனக்கொரு தாய் இருந்தாள்...
நள்ளிரவில் அவளைச்
சீருடைக் கடையர்
கடத்திச்சென்றனர் தொலைதூரம்.
ஓ, காடே!
என்னுடைய தாயாயிரு.

இனிய, அன்பான
என் தாயின் கவனமின்றி
எப்படி நான் வாழ்வேன்?
குருதி வழியும் என் காயங்களை
நோவெடுக்கும் களப் புண்களை
உனது அதிகாலைப் பனித்துளியில்
கழுவிக் குளிப்பாட்டு!

அன்பான நல்லவனே!
ஆபத்து நிறைந்த போர்க்களங்களில்
என்னைக் கவனித்துக்கொள்!

எனக்கொரு குடிசையிருந்தது...
கொடியவரிட்ட தீயில்
அது
காற்றுடன் கலந்துவிட்டது.
ஓ, காடே!
நீயென் வீடாயிரு.

தீயவரின் கரங்கள் உன்னைத்
தீண்டவும் அஞ்சும்.

சண்டைகளுக்குப் பிறகு —
கொடிய இரவுகளில்
உனது தழுவலில்நான்
அயர்ந்து உறங்குவேன்.
உனது அடர்ந்த இலைகளாலும்
வளையும் கிளைகளாலும்
என்னை அரவணைத்துத் தாலாட்டு!

எனக்கொரு தாயகம் இருக்கிறது.
கொடுங்கோலர்கள் அதனைப்
பிணையாய்ப் பிடித்துத்
துண்டாடுகிறார்கள்.
காடே! நீதான் என் உறைவிடம்.

ஆனாலும்
எனது இதயத்தில்
எனது தாயகத்தின் இடத்தை
உன்னால் நிரப்ப இயலாது!
எங்கள் தாயகத்தின்மீதான
நம்பிக்கையை இழக்கமாட்டோம்!

நாங்கள் அதனைத்
தாயைவிட — காதலியைவிட
வீட்டைவிட அதிகமாக
நேசிக்கிறோம்.

எங்களைக் காப்பாற்று
குமுறும் காடே
எங்களைக் கவனித்துக்கொள்
தாயகத்திற்காக — நாங்கள்
உயிரையே
பணயம் வைத்திருக்கிறோம். ★

என்றோ ஒருநாள் விடுதலைப் போரில் வீரமரணத்தைத் தழுவிய, யாரோ ஒரு தியாகியை கணவனாய்க் கற்பனையில் உருவகித்து வாழ்ந்துவிடுவது எவ்வளவோமேல். கேவலம், அரசு வீசும் பிச்சைக் காசுக்காக உன் இனத்தையே அழிக்கப் புறப்பட்டு விட்டாய். உன் வயதையொத்த எமது போராளிகள் எத்தனை இன்பத்தைத் துறந்து அன்னை பூமியை மீட்கக் களத்தில் குதித்துள்ளார்கள். நீ ஒரு தமிழன் என்று கூறவே அருகதையற்றவன். பிச்சை போடும் கூட்டத்தோடு சேர்ந்து வெறிநாயாகி விட்டாய். நிச்சயமாக ஒரு தமிழ்ப்பெண் உனக்கு மனைவியாவாள் என்று கனவு காணாதே! ஏனென்றால் இப்போது அவர்கள் பெண்புலிகள். எங்களுக்கு உயிர் பெரிதில்லை. மானம்தான் பெரிது. தன் மானத்தைவிட தமிழ் மானத்தைக் காப்பதே எம் கடமை. இப்படிப் பெண் பிச்சை கேட்டு நிற்கிறாயே வெட்கமில்லையா உனக்கு. போ வெளியே'' அடிப்பட்ட புலியின் சீறல்களாய்ப் பாய்ந்தன அவளின் சொல்லம்புகள்.

அவளின் அம்புகள் அவன் மூளையைத் தாக்குமுன், அவனுடைய இயந்திரத் துப்பாக்கி சடசடக்கிறது. ''மதம் பிடித்த புலிக்கூட்டம் நீங்கள் எல்லாரும்'' என முணுமுணுக்கிறது அவன் வாய். வீரமுழக்கமிட்ட ஆர்த்தியின் மார்பிலிருந்து இரத்தம் பீறிடக் கீழே சாய்கிறாள். அவளைத் தாங்க அங்கே யாருமில்லை. ஏனென்றால் துப்பாக்கிரவை மாத்திரைகளை அவளுக்கு முன்னதாகவே உண்டுவிட்டனர் அவளின் பெற்றோர். சாய்ந்துவிட்ட ஆர்த்தியின் கைக்குள் விடுதலைப் பிரசுரங்களைச் செருகுகிறான் அந்த கப்டன்.

மறுநாள் இலங்கை வானொலியின் செய்தி அலறுகிறது. ''நேற்றைய இராணுவத் தேடுதலின் போது வடபகுதியில் ஒரு வீட்டில் வைத்து மூன்று பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். அதைவிட பெருந்தொகையான துண்டுப் பிரசுரங்களும், ஆயுதங்களும், வெடி மருந்துகளும் மீட்கப்பட்டுள்ளன. அந்த பயங்கரவாத முகாமும் இராணுவத்தினரால் தகர்க்கப்பட்டுள்ளது' ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் கலை இலக்கியத்தின் பங்களிப்பு பற்றிய மதிப்பீடு என்ன?"

## கவிஞர் மூவரின் கருத்துக்கள்

## "படைப்பாளிகள் ஆழமாகப் பல விடயங்களைச் சிந்திக்கவேண்டும்"

— கவிஞர் இன்குலாப்

இலக்கியத்தின் பங்களிப்புப் பற்றி எனக்குத் தெளிவான சில வரையறைகள் உண்டு.

அவை குறைவானவையும் அல்ல, மிகையானவையும் அல்ல.


சமூக மாற்றம் எழுத்துக்களால் மட்டும் நடைபெறுவதில்லை. எழுத்துக்கள் இல்லாமலும் நடைபெறுவதில்லை. பண்பாட்டு அமைப்பு இல்லாதது, மந்தபுத்தி கொண்ட படையாக இருக்கும்' என்று மாவோ கூறினார். வெறும் பண்பாட்டு அமைப்பை மட்டுமே கொண்டிருக்கும் ஓர் இயக்கம் சத்தம் போடுவதாக இருக்கும்.

வால்டேர், ரூஸோ எழுதினார்—பிரஞ்சுப் புரட்சி நடைபெற்றது, கார்க்கி எழுதினார் ருஷ்யப் புரட்சி நடைபெற்றது என்று கூறுவதெல்லாம் எழுத்துக்கள் மட்டுமே புரட்சியைத் தூண்டுகின்றன என்ற கனவை வளர்க்கவே உதவும். உண்மை என்னவெனில் புரட்சிக்கான சூழல் அங்கெல்லாம் இருந்தது. அதை இவர்கள் எழுத்துக்களால் உத்வேகப் படுத்தினார்கள். இவர்கள் இல்லாமலும் அந்தப் புரட்சிகள் நடைபெற்றிருக்கக் கூடும். ஆனால் அவ்வளவு அழகானதாய் இருந்திருக்காது. அவ்வளவு மனிதாபிமானமிக்கதாய் இருந்திருக்காது. அதுபோலப் புரட்சியை இவர்களின் பேனாக்கள் முன்மொழியாதிருந்தால் அந்த



எழுத்துக்களில் உண்மை இருந்திருக்காது. இலக்கியத்தின் ஆன்மா உண்மைதான்.

புரட்சியை முன்னெடுத்துச் சென்றவர்கள் மாபெரும் கலைஞர்களாயும் இருந்தனர். லெனின் கலை, இலக்கியம் என்று எதையும் எழுதவில்லை தான். ஆனால் உண்மை சுடர் விடும் அவர் எழுத்துக்கள் எந்தக் கலைப் படைப்புக்கும் குறைவானவை அல்ல. மாவோ, ஹோசிமின், சேகுவாரா போன்றோர் துப்பாக்கியோடு பேனாவுமாய் நடந்தார்கள்.



தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இலக்கியம் பாரதூரமான பங்கு வகிக்கிறது. வெறுந் தேசியவாதமாகக் குறுக இருந்த தமிழீழ விடுதலைப் போராட்டத்தைச் சோசலிஸத் தமிழ் ஈழப் போராட்டமாக மாற்றியமைக்கும் சிந்தனையை வளர்த்ததில் ஈழ இலக்கியவாதிகள் மாபெரும் பங்கு வகிக்கிறார்கள்.

விடுதலைப் போருக்குக் கலைத்திறத்தால் உத்வேகமளிப்பதுடன் விடுதலைப் போரின் சரியான திசைவழியையும் ஈழக்கலைஞர்கள் படைத்துக் காட்டுகிறார்கள். இதில் சேரன் போன்றோருடைய அர்ப்பணிப்பு குறிப்பிடத்தக்கது.

வண்ணச் சிறகு எழுதிய 'வெல்லப்படாத விடுதலை' என்ற கவிதை புதிய மனிதனில் வெளியானபோது ஈழப்போராளிகள் உட்படப் பலர் எங்களைக் குறை சொல்லி விமரிசித்தனர்.

'இன்று வேறுமண்ணில்
கால்ஊன்றி நின்றபோது
ஆயுதங்களுக்காக
யாசித்தபோது
பயிற்சிக்காக
இடம்பெற்றபோது
அது
நம்கைகளில் இல்லை'

என்று அவர் எழுதியது திம்புப் பேச்சுக்களின் தொடக்கத்திலிருந்து இன்றுவரை எவ்வளவு தீர்க்கமாக வெளிப்படுகிறது.

செ. யோகநாதனின் 'எங்கெங்கு காணினும்' என்ற சிறுகதை தமிழக நிலையை அம்பலப் படுத்துவது மட்டுமல்ல— ஈழப்போராளிகளுக்கும் இதை உணர்த்தி எச்சரிப்பதுமாகும். இப்படிப் பல படைப்பாளிகளைக் குறிப்பிடலாம். அவர்கள் உண்மையை உணர்ந்து படைக்கும்பொழுது தமிழீழ விடுதலைப் போருக்கான சரியான திசைவழி காட்டப்படும் என்பது நிச்சயம்.

எமது தேசத்தின் நாகரீகம்
எம்மாலேயே
விலைபேசப்பட்டிருக்கின்றது!
தேச விடுதலைக்காய்
கரீம் காக்காவும் கந்தசாமியும்
கைகோர்த்துக் கால்பதித்த
தடங்கள் —'இன்று
குருதியில் குளித்து...
சாம்பல் பூத்து...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒருவர் கண்களை
ஒருவர் கரங்களால்
இன்னும் எத்தனை நாள்
மூடிக்கொண்டிருப்போம்?

'பொங்கும் தமிழமுது' பத்திரிகை இதில் சிறப்பான பங்கு வகிப்பது மகிழ்ச்சிக்குரியது. முஸ்லிம் சிறுபான்மையினருடன் உறவுகள் சிதறவிருந்த நேரத்தில் பொங்கும் தமிழமுது பொறுப்புடன் வெளியிட்ட மேற்படிகவிதைகள் அந்த உறவுகளைக் காக்க உதவி இருக்கும்.

படைப்பாளிகள் ஆழமாகப் பல விஷயங்களைச் சிந்திக்க வேண்டும். துணிவாக முன்மொழியவேண்டும். ஹோசிமின் கூறியதுபோல 'வானத்து நிலவையும் மலரையும் பாடிய காலம் போய்விட்டது. இப்பொழுது எஃகையும் துப்பாக்கியையும் பாடும் காலம் - என்பது மட்டுமல்ல பங்கேற்கும்— நிலைமைதாங்கும் காலமும்கூட.

**"போராளிகளே படைப்பாளிகளாயும், படைப்பாளிகளே போராளிகளாயும் திகழ்கிறார்கள்!"**

— கவிஞர் வைரமுத்து

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் பேனா பிடிக்கிறவர்களை விடவும் ஆயுதம் பிடிக்கிறவர்களின் பங்கே அதிகம் வேண்டப்படுகிறது.

கலை இலக்கியம் என்பது அழகுகளை ஆராதிப்பதற்கான வெறும் ஒப்பனை விஷயமாகவே பன்னெடுங்காலமாகப் பழகி வந்திருப்பதால், தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு கலை இலக்கியம் தன் பங்காக என்ன செய்ய முடியும் என்பதைத் தீர்மானிப்பது சமூக விரும்பிகளுக்கோ விமர்சகர்களுக்கோ அவ்வளவு எளிதானதாக இல்லை.

ஆனால், தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் கலைக்கும், வாழ்க்கைக்கும் இடையே இருந்த தடித்த சுவரைக் தகர்த்திருக்கிறது என்பது மட்டும் கலைக்கும் வாழ்க்கைக்கும் ஒரு புதிய பரிணாமத்தை வழங்கியிருக்கிறது.



வேறெந்த விடுதலைப் போராட்டத்திற்கும் இல்லாத அளவிற்குத் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு சிறப்பு உண்டு.

இதில், போராளிகளே படைப்பாளிகளாகவும், படைப்பாளிகளே போராளிகளாகவும் திகழ்கிறார்கள்.



ஆனால், தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு இதுவரையிலான கலை இலக்கியம் அனுதாபம் தேடுவதற்காகவே அதிகம் பாடுபட்டிருக்கிறது.

தங்களுக்கு நேர்ந்த அவலங்களைப் பற்றி அதிகம் அழுது, தங்கள்பாலிருக்கும் அவலங்களுக்கு நியாயம் தேடுவதே அதன் வேலையாகிவிட்டது.

ஆனால் இன்று — தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயங்களை வர்க்கச் சார்பறியாத ஒரு பாமரன் கூட விளங்கிக் கொண்டுவிட்டான்

எனவே, கலை இலக்கியத்தின் அடுத்த கட்டப்பணி தீர்வு சொல்லும் பாதையில் திரும்ப வேண்டும்.

அப்படித் திரும்பாவிட்டால் கலை இலக்கியமும் திம்புவில் நடந்த பேச்சுவார்த்தை மாதிரி பயனற்றுப் போகும்.

ஆயுதத்தை விடப் பேனா தான் பெரிது என்கிறுர்கள்.

அதை நடைமுறைப்படுத்துவதே நமது நாளையத் தேவை.

கலை இலக்கியத்தின் சக்தி என்னவென்று மெய்ப்பிப்பதற்கு — தமிழனுக்கு இப்படியொரு சந்தர்ப்பத்தை வரலாறு வழங்கியிருக்கிறது.

இதனால் இனமொழி வரலாறு மட்டுமல்ல கலை இலக்கியத்தின் வரலாறும் மேம்படவிருக்கிறது.

**"போராளிக்குப் புத்துணர்ச்சி கொடுப்பவன் படைப்பாளியே என்பதை புத்திசாலிகள் புரிந்து கொள்வார்கள்"**

— கவிஞர் மு. மேத்தா

எந்த விடுதலைப் போராட்டத்திலும் கலையும் இலக்கியமும் தம்முடைய கணிசமான பங்களிப்பை அளித்தே வருகின்றன.

சுதந்திர நெருப்பு தேசத்தில் எரிவதற்கு முன்பாகவே அதை தேகத்தில் எரியவைக்கும் அரிய பணியையே கலை இலக்கியம் ஆற்றுகிறது.

விடுதலை வீரர்களுக்கு உணர்வு விறகுகளை உண்டாக்கித் தருவதும், கங்குகளாய் நெஞ்சத்தைக் காப்பாற்றி வைப்பதும், கலையும் இலக்கியமும் செய்துவரும் காரியங்களே!

எந்த விடுதலைப் போராட்டத்திலும் அதுவே நிலமையென்றால் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மட்டும் இதனைத் தவிர்க்க முடியுமா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





வேங்கைகள் வேள்வி நடத்துகிறார்கள்.

இளைஞர்கள் போராடுகிறார்கள்.

சிறுத்தைகள் சீறி எழுகிறார்கள்.

அந்த வேள்விக்கும் போராட்டத்திற்கும் சீற்றத்திற்கும் தேவையான கோபக் குமுறல்களை—கலையும் இலக்கியமுமே ஊற்றுக் கண்திறந்து உண்டாக்கித் தருகிறது.

உறங்கிக் கிடப்பவர்களை உசுப்பி விடுவதும், மயங்கிக் கிடப்பவர்களுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்து அணி வகுக்கச் செய்வதும் கலை, இலக்கியத்தின் மகத்தான பணியாகும்.

ஆயுதம் கையில் இருக்கலாம், அதை வீசுவதற்குரிய வேகத்தைத் தருவது எது? கண்ணீரின் ஈரத்தில் கரைந்து போய் விடாமல் — விடுதலைப் புறாக்களின் சிறகுகளைக் காப்பாற்றி வருவது எது? கலையும் இலக்கியமுமே.

ஒரு போராளிக்குப் புத்துணர்ச்சி கொடுப்பவன் படைப்பாளியே என்பதைப்புத்திசாலிகள் புரிந்து கொள்வார்கள்.

இலக்கியமும் கலையும் இல்லாமல் போராட்டம் தொடங்கலாம், ஆனால் தொடங்கிய போராட்டம் தொடர்வதற்குக் கலையும் இலக்கியமுமே துணை செய்கின்றன.

நிரந்தரமான போராட்டங்களையும், நிச்சயமான வெற்றிகளையும் நிலைநிறுத்தும் தூண்களாகவே கலையையும் இலக்கியத்தையும் கருதவேண்டும்.

சிங்களவரின் முதல்வன் விஜயனுக்கு தென்னிந்திய தமிழ் ராஜகுமாரியை மனைவியாகக் கொண்டுவர முடியுமென்றால், அவனது 700 தோழர்களுக்கு தமிழ்ப் பெண்களையே மணமுடிக்க முடியுமென்றால், கண்டியின் கடைசி மன்னனாக ஒரு தமிழருக்கு முடிசூட்ட முடியுமென்றால், அந்தத் தமிழ் மன்னனின் ராஜ குமாரிகள் வணங்குவதற்காக பௌத்த ஸ்தலத்திற்கு பக்கத்திலேயே ஒரு இந்துக் கோவில்கூட கட்டப்பட முடியுமானால் ஏன் நாம் இன்று தமிழருடன் சகோதரர்களாக வாழ முடியாது?

— **விஜய குமாரரணதுங்க**



# அம்மா என்னை மன்னித்துவிடு!

● *தாரணி. சந்திரன்*



அம்மா!
உன் அழுகையை நிறுத்து
ஏன் அம்மா அழுகிறாய்?
உன் பிள்ளையாகிய எனக்கு
சரிவரப் பாடம்
புகவில்லை என்றா?
நிறுத்து

அம்மா!
ஒரு அழுமூஞ்சித் தாய்க்கு
நான் புதல்வனாக இருக்க
விரும்பவில்லை!
நான் காதல் கடிதம்
எழுதிக்கொண்டிருப்பதாக
நீ எண்ணுகிறாய்
நீ எண்ணுவது தவறம்மா
நான்
வருங்கால மனிதர்களுக்கு
பொது உடமைச் சட்டங்களை
எழுதிக்கொண்டிருக்கிறேன்.

அம்மா!
தயவு செய்து
இனி உன் புதல்வனைத்
தேடாதே!
பத்து மாதம் சுமந்து
பலகாலம் நொந்து
என்னை மனிதனாக்கியதற்கு
நன்றி!
இன்று —
உங்களை அனாதையாய்
விட்டுச் செல்வதாக
அழுது தவிக்காதே!

அம்மா
என்னைக்
கோபத்தாலும் திட்டாதே!
நான் உன்னை விட்டுப்
பிரிந்திருப்பது
போதிமரத்தடிப்
புத்தனாக அல்ல
புரட்சி வீரனாக.

அம்மா!
பாடசாலைக்குப் போ, போ
என்று வற்புறுத்தினாயே

அம்மா!
இப்போது படிப்பிற்கு
நேரம் வந்துவிட்டது.
இந்தப் பாடசாலையிலிருந்து
நான் வரும்வரை
நீ காத்திரு!
ஆராத்தியெடுக்கக் காத்திரு!

அம்மா!
ஒருவேளை — நான்
வரவில்லையெனில்
தயவு செய்து என்னை
மன்னித்துவிடு.

அம்மா!
நான் உன்னை நேசிக்கிறேன்
அதே நேரம்
நான் பிறந்த மண்ணையும்
அந்த மண்ணில் பிறந்த
மக்களையும் நேசிக்கிறேன். ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# ஒரு விடுதலைப்போராளியின் வீர அனுபவங்கள்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

மீண்டும் சிறிது அதிக நூல்களை (Bandage) இலிருந்து இழுத்தெடுத்து அதன் நடுப் பகுதியில் சுருக்கிட்டு, இருமுனைகளையும் வெளியே கையில் பிடித்து சுருக்கை உள்ளே நகர்த்திச் சிரமப்பட்டுத் திருகின் முனையில் கொளுவிக் கொண்டேன். கொளுவியபின் இரு முனைகளையும் சேர்த்து திரித்து மூடித்து அதைச் சாரத்துடன் சேர்த்துக்கட்டி நேராக மேலிழுத்தேன்.

பூட்டுத் திறப்பட்டு கைவளையல் விலகியபோது, சிறைக் கதவே திறப்பட்டு நான் அங்கிருந்து விடுதலை பெறுவது போலிருந்தது.

சரி, விலங்கு திறக்கலாம். 15 நாட்களுக்குள் சுவரைத் தோண்டி வெளியேற வேண்டும்.

சுவரைத் தோண்டுவதுதான் இனி வேலை. மிகுந்த புத்தி சாலித்தனத்துடன் செய்யவேண்டிய வேலை.

காலை 6 மணிக்கு தேநீர், 7.30ற்கு காலை உணவு (அரை பாண்) 9 மணிக்கு அறை சுத்தம் செய்யும் ஊழியன், 9.30ற்கு, மருத்துவர்கள் சோதனை, 10 மணிகு பால், 12மணிக்கு மதிய உணவு சோறு, மாலை 4மணிக்கு மீண்டும் பால், 6 மணிக்கு இரவு உணவு 9மணிக்கு தேனீர் இவையனைத்தும் அறையுள் வந்து சேரும்.

சில தினங்களில் எந்த நேரத்திலும் இரகசிய பொலிசார் விசாரணைக்கு வருவார்கள்.

இவர்கள் கண்ணிலும், இந்த நேர இடைவெளிக்குள் காவல் புரியும் ராணுவச் சிப்பாய்களின் கண்ணிலும் படாது 15 நாட்களுக்குள் நாற்காலிச் சட்டத்தால் சுவரைத் தோண்டி வெளியேற வேண்டும்.

மிகவும் கடினமான காரியம். மனோரீதியாக அவர்கள் என்னைச் சந்தேகம் கொள்ளாது இருப்பதற்கு அப்பாவி போல் நடித்தேன்.

விசாரணைக்கு வரும் சி.ஐ.டி. அதிகாரிகளிடம் 'உணவு போதாது சேர்!' என்று கூறுவேன்.

விலங்கிட இரவில் பிந்தினால், காவல் புரியும் சிப்பாய்களிடம் 'விலங்கிடத் தேவையில்லையா?' என்று கேட்டு அவர்களை விலங்கிடப் பண்ணுவேன். அவர்கள் பாட்டுப் படிக்கும்படி கேட்டால் உடனே பாடுவேன்.

அவர்கள் தேநீர் பருகும் போது எனக்கும் கொடுக்கும்படி கேட்டு, கோப்பையை ஏந்த, அவர்கள் கம்பி இடுக்கால் ஊற்ற, வாங்கிக் குடிப்பேன்.

ஆங்காங்கு சேகரித்து வைத்திருந்த சுவர் வண்ணக் காரைகளை பிஸ்கட் பெட்டி அட்டையில் இட்டு, சிறுநீர் கழிக்கும் பேணியால் அரைத்து மாவாக்கி, நீரிட்டு, பாண் சேர்த்து பிசைந்து, அட்டையில் பூசி, மேலும் காரைத்தூள்களை அட்டைமேல் தூவிக் காய வைத்து மீண்டும் பேணியால் அழுத்தி மட்டமாக்கிப், பளபளப்பாக்கினேன்.

படுக்கை விரிப்பு எப்போதும் கட்டிலின் கீழ்ப்பகுதியை மறைக்கும்வண்ணம் கீழ் இழுத்து விடப்பட்டிருக்கும்.

Bedpan ஐயும் கட்டிலின் பின்புற சுவரருகே வைத்தேன். தகுந்த நேரம் கிடைக்கும்போது சுவரருகே சென்று தோண்ட ஆரம்பித்தேன். முன்புறக் கதவை நோக்கியபடி இடது கையால் சுவரை மெதுவாகக் கிண்டுவேன்.

காவல் சிப்பாய் யாரும் கதவருகே வந்தால் காலைக்கடனைக் கழித்துவிட்டு வருபவனைப் போல வந்து படுத்து விடுவேன்.

சுவரைக் கிண்டும் போது கொட்டும் மண்ணை சாரத்துள் இட்டு மடித்துக் கட்டிக்கொண்டு யாரும் பார்க்காத வேளையில் வலது புறமிருக்கும் குளியலறைக்குள் அதைக் கொட்டி நீரூற்றி விடுவேன்.

துவாரத்தை வர்ணம் பூசப்பட்ட அட்டையின் முன்புறம் கட்டிலின் பின்பகுதியில் மெத்தைக்கு அடியில் இருக்கும்.

பணி தொடர்ந்தது. சீப்புப் பல்லின் இடைவெளிக்குள் தினமும் பஞ்சுத் துண்டொன்றை மாற்றி மாற்றி செருகி வைத்து திகதிகளைக் கணித்து வந்தேன்.

இன்னும் 5 நாட்களானால் நான் இராணுவ முகாமுக்கு மாற்றப்படுவேன். தற்போது சுவர் பூச்சு முழுவதும் தோண்டப்பட்டு செங்கட்டி இடைவெளியில் உள்ள இணைப்புப் பூச்சுகள் அகற்றப்பட்டுவிட்டது.

செங்கட்டிகளை அகற்றிவிட்டு வெளியேற வேண்டியதுதான் வேலை.

மறுநாள் வெளியேறுவதென்று தீர்மானித்தேன். வெளியேறுவதாயின் அதற்குரிய நேரத்தைத் தீர்மானித்துக் கொண்டேன், அதிகாலை மூன்று-மூன்றரை மணியளவில் வெளியேறினால் தான் ஏனையவர்களின் கண்ணிலும் படாமல் தப்பலாம். அமைதியான ஆள்நடமாட்டமற்ற நேரமாகவும் இருக்கும். அத்துடன் மூன்றரை மணிக்கு வெளியேறினால் தப்பிச் செல்

www.tamilarangam.net



வதற்கு இரண்டரைமணி நேர அவகாசம் கிடைக்கும். (சேவகன் முதலாவதாக காலை 6 மணிக்கு தேனீருடன் உள்ளே வருவான்.)

தரப்பட்ட விலங்கை மெதுவாக கழற்றிக் கொண்டேன்;

தலையணைகளில் ஒன்றை எடுத்து உருட்டி தலைப்பகுதியில் வைத்தேன். மறுதலையணையை இரண்டாக மடித்து, மடிக்கப்பட்ட ருனை இரண்டு கால்களைப் போல் தோற்றமளிக்கக்கூடியவாறு வைத்தேன். Bedpanஐ நடுப்புள்ளியில் வைத்தேன். சாரத்தால் இவற்றைப் போர்த்தித் தயாராக வைத்திருந்த பாண்பசையால் நான்கு முனைகளையும் கட்டில் விரிப்புடன் சேர்த்து ஒட்டினேன். காற்று வீசும்போது போர்வை விலகாது என்ற நம்பிக்கை, இவையனைத்தும் நடைபெறும் போது காவல் சிப்பாய் கதவினூடாகப் பார்த்தால் பொம்மையின் மீது படுத்து விடுவேன். இடதுபுறம் கட்டிலில் தொங்கிய விலங்கைக் கழற்றி வைத்துக் கொண்டேன். வலது புற விலங்கை போர்வையுள் செருகி விட்டேன். சாரத்தில் கிழித்தெடுத்த கரைத் துண்டொன்றால் அவ்விலங்கின் நுனியில் ஒரு கட்டிட்டு அத்துண்டை பொம்மையின் போர்வையூடாகச் செலுத்தி கால் பகுதியில் தொங்க விட்டேன். கட்டிலிலிருந்து கழட்டிய மறுவிலங்கை கையில் எடுத்துக் கொண்டு சுவரருகே சென்று வேகமாகச் செயல்பட்டேன். அரை மணி நேரம் செயல்பட்டிருப்பேன் நேரம் அதிகாலை இரண்டுமணி. செங்கட்டி இடுக்குப் பகுதியில் விலங்கைக் கொழுவி இழுத்தேன். உடைந்த சுண்ணாம்பு கட்டியுடன் மீண்டு வந்த விலங்கு கட்டில் கால்களில் 'டங்' என்று அடித்தது. அதிர்ச்சியடைந்தேன்.

காவல் சிப்பாய்கள் ஓடிவந்து கததருகே நின்று பார்த்தார்கள். இருவரும் கட்டிலில் கிடந்த பொம்மையைப் பார்த்து தமக்குள் சிங்களத்தில், ''இறந்தவன் போலக் கிடக்கிறானே''' என்று பேசிக் கொண்டனர். நான் படுத்திருக்கிறேன் என்று நம்புவதற்காக முன்பு விலங்கின் நுனியில் கட்டி போர்வையூடாக இருந்து வந்து கட்டில் காலருகே விட்ட நூலை இழுத்து ஆட்டி விலங்கை அசைத்துக் கொண்டேன். அதிகாரி போய் விட்டான். சிப்பாய் தொடர்ந்து நின்று கொண்டிருந்தான். அன்று அவசரத்தில் படுக்கை விரிப்பைக் கீழ் இழுத்து விடாததாலும் மின்விளக்கு எரிந்து கொண்டிருந்ததாலும் முற்றாக மடக்கமுடியாத எனது காலின் ஒரு பகுதி சிப்பாயின் கண்ணில் பட்டுவிட்டது, உடனே அவன் சந்தேகத்தில் கட்டிலின் பின்புறத்தில் காலொன்று தெரிவது போல் இருக்கிறது என அதிகாரியிடம் கூறினான். வந்து பார்த்த அதிகாரி, கட்டிலில் கிடந்த பொம்மையைக் கண்டு விட்டு 'அவன் தூங்குகிறான் நீ ஏன் ஏங்குகிறாய்?' என கூறி விட்டுச் சென்றான்.

தொடர்ந்து உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த சிப்பாய், அதிகாரியைக் கூவி அழைக்க அறைக்கதவின் திறப்புக் கோர்வை சிலுங்கியது. எனது உடல் படபடத்தது. அறைக் கதவு திறக்கப்பட்டது, நான் துளைக்கப்பட்ட சுவரருகே சிலையாக அமர்ந்திருந்தேன்.

மீண்டும் குரங்கின் கை பூமாலை. கட்டிலில் கிடந்த பொம்மைகளையும், என்னையும், துளைக்கப்பட்ட சுவரையும் பார்த்தபோது அவர்களுக்கு ஆத்திரம் பீறிட்டது. 'இவ்வளவு துணிவாடா உனக்கு?' என்ற கேள்வியும் அடி உதைகளும் ஒரே நேரத்தில் கிடைத்தது.



குப்புற இருந்த கையுடன் காலைச் சேர்த்து விலங்கிட்டு விட்டுத் தொடர்ந்து தாக்கினார்கள்.

இரண்டு நாட்கள் ஊனுமில்லை, உறக்கமுமில்லை, கையும்காலும், விலங்கிடப்பட்ட நிலையிலுள்ள என்னை ஊழியர்கள் கூட தமது ஆத்திரம் தீரும் வரை தாக்கிக் கொண்டனர். தொடர்ந்து வந்த ராணுவ அதிகாரிகள் அனைத்தையும் பார்த்துச் சென்றனர்.

காவல் புரிந்த சிப்பாய்கள் கோபங்கலந்த கிண்டலுடன் 'அடோ! தப்பிப்போய், நம்ம வேலையைப் பறிக்கப் பார்த்தது' என்று கேட்டு அடித்தனர்.

இரண்டாவது நாள் சி.ஐ.டி. அதிகாரி (முஸ்லிம்) சலாவுதீன் புகைப்படக்காரர் சகிதம் அறைக்குள் நுழைந்தான்.

துளைக்கப்பட்ட சுவர்ப்பகுதி, திறக்கப்பட்ட கைவிலங்கு, போலிப்பொம்மை, உபயோகித்த உபகரணங்கள் ஆகியவற்றை ஒன்றன்பின் ஒன்றாக நுணுக்கமாகப் புகைப்படக்காரர்கள் கிளிக்செய்து கொண்டனர்.

'அடோ என்ன வேலை செய்தது? எப்படியடா விலங்கைக் கழட்டினாய்?' என்று கேட்க நான் மறைக்க முடியாததால் விபரத்தைக் கூற உடனே நூலை வரவழைத்து விலங்கைத்திறந்து காட்டும்படி கேட்டுக் கொண்டார்.

நூலை உள்ளே விடும்போது, இழுக்கும்போது, திறபடும்போது புகைப்படக்காரர்களின் கமராக்கள் வேகமாக இயங்கின. விசாரணையை முடித்துக் கொண்டு சலாவுதீன் சென்று விட்டார்.

தொடர்ந்து வந்த சிங்கள ராணுவ அதிகாரியொருவர் அறைக்குள் நுழைந்ததும் கை குலுக்கிக்கொண்டார். 'விலங்கு திறப்பதற்குப் பயிற்சி எடுத்ததோ?' என்று கேட்க நான் 'இல்லை' என்றுகூறி மௌனம் சாதிக்க தன்னுடன் வந்திருந்த அதிகாரிகளை நோக்கி 'உமா மகேஸ்வரஹே கட்டிய ஒக்கம ஹொந்த வெடக்காரயோ, (உமாமகேஸ்வரன் ஆட்களெல்லாம் கெட்டிக்காரர்கள்) என்று கூறி விட்டு கையைப் பின்புறம் சேர்த்து விலங்கிடும்படி உத்தரவிட்டுச் சென்று விட்டான்.

அறையைச் சுற்றியுள்ள சுவர் முழுவதும் பரிசோதிக்கப்பட்டு, பழுது பார்க்கப்பட்டு காவல் புரியும் சிப்பாய்களின் எண்ணிக்கையும் கூட்டப்பட்டது.

தொடர்ச்சியான அடி, உதைகளால் மீண்டும் இடதுகால் உடைந்தது.

இரண்டு நாட்கள் செல்லப் பலத்த இராணுவப் பாதுகாப்புடன் வெலிக்கடைச் சிறைச் சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டேன்.

விமானப்படை அதிகாரிகளிடம் என்னை ஒப்படைத்த சிறை அதிகாரிகள் வவுனியா விமானப்

(தொடர்ச்சி 38ம் பக்கம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# இரவின் பகல்

—செவ்வண்ணன்—

பிற்பகல் 2-30
வெலிக்கடைச் சிறை
25-07-83
இலங்கை

உச்சிச் சூரியன்
மேற்கு நோக்கி
மெல்ல நடக்கலானான்
அது போதும்
தீவைச்சுற்றிக் குளிர்காற்று!

சிறைக் கம்பிகளில்
துருதட்ட முடியாமல்
காற்று புழுதியாயிற்று.

பூட்சுகள் புறப்பட்டன.
ஒருசேரத் திரண்டன,
கூலி மேங்கள்.
விழிகள் மேல்
பேரின அக்கினித்
திரவகத்தை இறைக்க
விரோதிகளின் 'இதயம்' —
துருவப் பிரதேசப்
பனிக்கட்டிபோல் இறுகிற்று!

பூட்டுகள் —
திருட்டுக் கைகளால்
உடைக்கப்பட்டன.
வேங்கைகள்
வேட்டையாடப்பட்டனர்!

எதிர்காலத்தைச் சுமந்த
கனவுகள் —
காலால் எற்றப்பட்டன.

மக்களைச் சுமந்த
இதயங்கள் —
இரும்புக் கம்பிகளால்
போர்த்தப்பட்டன.

ஈழத்தைச் சுமந்த
விழிகள் —
கருமணியின் அடிவரை
கலைக்கப்பட்டன.

விட்டுச் சென்றனர் —
இரத்தப் படுக்கைகளை,
சிதறிய கருமணிகளை!

இலங்கையைத்
தமிழகத்தினின்று பிரித்தது
பழைய கடற்கோள் — பிறகு
இப்போதுதான் முதன்முறை
இரத்தக் கடல்கோள் —
சிறையைக் கழுவியது.

மனித விழிகள் —
ரணங் கட்டித்
துடித்துக் கிடந்தன.

பேச்சுமூச்சற்ற வெற்றிடம் —
ஈழம் ஈழம் என்று
எஃகுப் பார்வை மட்டும்
ஒரு பகலைப்போல்
பரவிப் பரவி ஜொலித்தது!

ஒரு விரிந்த வட்டம்போல்
முன்னோக்கிச் சுழன்றது —
உச்சியிலிருந்து அந்திவரை!

நியாயத்தின் பார்வை
நிலத்தைக் கேட்டது:
'ஏன் இந்த இரத்தம்'
சிறைத் தரையோ
கருங்கல்லால் மட்டும்
'காங்கரீட்'
போடப்பட்டிருந்தது.

ஜில்லிட்ட
காற்றைக்கேட்டது:
'இது யாருடைய
இருட்டின் துர்நாற்றம்'
'உஷ்' என்றது காற்று.
இருட்டு — போதையில்
மதயானையைப் போல்
இங்கும் அங்கும் குதித்தது.
பகலுக்குள் வாழும்
இரவின் பூமி!

●

இரவு 7-00 மணி
மட்டக்களப்புச் சிறை
23 9-83
இலங்கை,

அந்தியின் கறுத்த இருள் —
நிழல்களில் ஒட்டியிருந்த
வெளிச்சத் துணுக்குகளையும்
விட்டெறிந்து இருந்தது.

எங்கள்
விழிகளில் பருகிய ரத்தம்—
சுடலை எரிக்கும் தீப்பந்தமாக
கொலைகாரர்களின்
அடிவயிற்றில் ஆர்ப்பாட்டம்
செய்யத்துவங்கியது.

பங்கிகானத்தில் —
ஜெயவர்த்தனா சீடர்கள்
கொண்டாடினர்.

சிறைக்கதவுப் பூட்டு
திறவுகோலைத் தேடி
முன்னுதட்டு மடல் விரிய
கோஷித்துக்கொண்டிருந்தது.

சூரியன் மாறுதலுக்காக
மறுபடி —
மேற்கில் உதித்துக்
கிழக்கில் ஒளிவிழக்
கிளம்பிக்கொண்டிருந்தான்,
வட்ட மேசைக்காரர்கள்
அடிக்கடி —
கடலைக்
கடந்துகொண்டிருந்தனர்.

கனவுகளை எற்றிய
கால்கள் எவரது?
இதயங்களைப் போர்த்த
இரும்புக் கம்பிகளின்
மறுமுனை எவன்கையில்?

விழிகளைக் கலைத்த
விரல் நகங்கள் யாருடையது?
பழிக்குப் பழி!
தியாக விழிகளின்
உயிருள்ள பார்வை
இருட்டுக்குள் சிங்கமாய்
அடியெடுத்தது.

சிறைக்கூட மணிக்கூண்டு
கண்ணைக் கசக்கிய
கூச்சத்தில் மங்கியது.

ஏற்கனவே
காவலாளிகள் —
கெட்டசொப்பனம்
கண்டுவந்தனர்.

இதோ —
'கனவு' நனவாகிறது!
இரவுக்குள் வாழும்
பகலின் பூமி —
ஒரே ஆன்மாவின்
நூறு முகமாய்
ஒரே முகத்தின்
நூறு கைகளாய்
எழுந்தது.

பூட்டைப் பொசுக்கியது
கம்பிகளை உருக்கியது
விலங்குகளை உடைத்தது
கனவுகள் உயிர்த்தன!
ஈழம் உயிர்க்கும்!
தமிழீழம் ஒளி கொள்ளும்! ●

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# கேள்வி? பதில்!

※ தமிழீழப் போராட்டத்தின் உச்சக் கட்டமான ஆயுதப் போராட்டம் வலுவடையும்போது மலையகத் தமிழர் நிலை என்னவாகும்?

க. முனுசாமி,

—பண்டாரவளை.

● தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் என்ற அனைத்துத் தமிழ்பேசும் மக்களதும் நலன்கள் மீது உரிய அக்கறையுடனும் அனைத்துத் தமிழ்பேசும், மக்களது பொருத்தமான பல்வேறு பங்கு பற்றுதலிலும் நெறிப்படுத்தப்படும் தமிழீழ ஆயுதப் போராட்டம் மட்டுமே வெற்றிகரமான மட்டத்திற்கு உக்கிரமடைய முடியும். எனவே மலையக மக்களின் பிரச்சனைகளின் விஷேசத் தன்மைகளையும், பொதுத் தன்மைகளையும் உள்வாங்கி, அவை பற்றிய சரியான அணுகுமுறையுடன் சரியான இராணுவ அரசியல் ஏற்பாடுகளுடன் தமிழீழ விடுதலைப் போராட்டம் திட்டமிடப்பட வேண்டும். இத்தகைய திட்டமிடல்கள் மலையகத்தில் புவியியல் தொடர்பின்மைபற்றிய பிரச்சனைகளையும் மலையக மக்களின் கிட்டிய அயலவர்களாகிய கண்டியச் சிங்களவர் மத்தியில் நிலவும் முற்போக்கான இயக்கங்கள் பற்றியும் போதிய பிரக்ஞையை வகுத்திடல் வேண்டும். இத்தகைய நடைமுறைகள் பின்பற்றப்படுமானால் மேற்கூறிய அச்சம் நிலவுவதற்கு இடமில்லை.

※ சிறிலங்கா அரசு முஸ்லிம் மக்களைத் தமிழர்களிடமிருந்து பிரித்துவைத்துப் பேசும்போது முஸ்லிம் மக்கள் அதை மறுத்து "நாமும் தமிழர் என்ற தேசிய இனத்துக்குள்ளேயே அடங்குகிறோம்" எனக் கூறுவதாகத் தெரியவில்லையே?

எம். எம். என். மகறுவ்,

—காத்தான்குடி

● தமிழ்பேசும் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தைச் சரியான திசைவழியில் முன்னெடுப்பதற்கும், உலக முற்போக்குச் சக்திகளின் ஆதரவைத் திரட்டுவதற்கும், தமிழ் மக்களின் கோரிக்கைகளை எவ்வித ஈடாட்டமுமின்றி ஒரே குறிக்கோளுடன் உரத்த குரலில் முன் வைப்பதற்கும், அதைக் குறி பிசகாமல் வெற்றியை நோக்கி இட்டுச் செல்வதற்கும் விடுதலை இயக்கங்களுக்கிடையில் ஐக்கியமின்மையும், பிளவும், அவற்றைச் சில சக்திகள் பிரித்துவைத்தே காரிய மாற்றி வருவதும் எப்படித் தடையாக இருக்கின்றதோ அவ்வாறே முஸ்லிம் மக்களைப் பிரித்து வைப்பதும் தடையாக இருக்கின்றது. (முஸ்லிம் மக்களை மட்டுமல்ல மலையகத் தமிழரையும் தமிழ் பேசும் தேசிய இனத்திலிருந்து பிரித்துவைப்பதற்கே சிங்கள பௌத்த பெருந்தேசிய இனவாதம் பிரயத்தனம் செய்து வருகிறது.) தமிழ்பேசும் தேசிய இனத்தை மூன்றாகப் பிரித்து இலகுவில் ஆளலாம், கால கதியில் சிதைத்துவிடலாம் என்ற கொள்கையையே பௌத்த சிங்கள பெருந்தேசிய இனவாதம் கொண்டிருக்கிறது என்பதை இலங்கை அரசியல் வரலாற்றை மேலோட்டமாக அறிந்தவர்கள் கூட ஒப்புக் கொள்வார்கள். எனவே ஒரே பிரதேசத்தில் வாழுகின்ற, ஒரே மொழியைப் பேசுகின்ற, ஒரேவித வாழ்க்கை முறைகளையும் பொருளாதாரத்தையும், கலாசாரப் பண்புகளையும் கொண்டுள்ள மக்கள் அழிக்கப்படுவதற்காகவே பிரிக்கப்படும்போது தமது மண்ணையும் மக்களையும் பாதுகாத்துக் கொள்வதற்காக, பொது எதிரிக்கெதிராக அவர்கள் அணிதிரள வேண்டும், போராடுவதற்குக் கொதித்தெழ வேண்டும்— இதுவே வரலாற்று நியதி.

இந்தப் பின்னணியோடு தங்களின் கேள்வியை எடுத்துக் கொள்வோம்,

"நாங்களும் தமிழ்த் தேசிய இனத்துக்குள்ளேயே அடங்குகிறோம்" என்று முஸ்லிம் மக்கள் கூறவேண்டும் எனும் போது இதை யார் பிரகடனப் படுத்துவது? இன்று முஸ்லிம் மக்களின் தலைவர்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளவர்கள் அல்லவா? ஆனால் இவர்கள் யார்? பெரும் முதலாளித்துவவாதிகள், நிலச் சுவாந்தர்கள், வர்த்தகப் பெரும் புள்ளிகள், பதவியையே பெரிதாகக் கொண்டிருக்கும் சந்தர்ப்பவாதிகள். ஒட்டுமொத்தத்தில் தமது வர்க்க நலனையே காத்துக் கொள்வதில் கருத்தாயிருப்பவர்கள். எனவே சாதாரண (இந்து, கிறிஸ்தவ தமிழர்களைப் போன்ற) இஸ்லாமியத் தமிழர்களின் நலன்களுக்காகவோ அல்லது அவர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய "தமிழ்பேசும் தேசிய இனம்" எனப் பிரகடனப் படுத்துவதற்கோ இவர்கள் முன்வரப்போவதில்லை. கடந்த காலங்களில் "தமிழ் பேசும் இனம்," "நமது பிரதேசம்" என முழங்கி வெற்றி பெற்றவர்கள் கூட பின்னர் வர்க்கம் சார்ந்தும், பதவி வெறி கொண்டும் ஆளும் கட்சிகளுடன் சேர்ந்து கொண்ட வரலாறே இதை நிரூபிக்கும். எனினும் இன்று மாற்றம் காணப்படவே செய்கிறது. சில முஸ்லிம் தலைவர்கள் வட, கிழக்கு மாகாணங்கள் ஒன்றாக இணையவேண்டும் என்கின்றார்கள்; பலர் அப்படி இணையக் கூடாது என்கின்றார்கள்; "இணைய வேண்டும்" எனக் கூறுபவர்கள் வட, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களாகவும், 'இணையக்கூடாது' என்பவர்கள் "கொழும்பு முஸ்லிம்களாகவும், சுரண்டல் வர்க்கத்தினராகவும், பதவி வெறியர்களாகவும் இருப்பதை கவனிக்க முடிகிறது. எனவே போராட்டம் நீறுபூத்துக் கிடக்கிறது. இந்த நிலையில் தமது மரபு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களையும், பிரதேசத்தையும், உரிமைகளையும் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பு ''புதிய'' முஸ்லிம் இளைஞர் கரங்களிலேயே தங்கியுள்ளது: பாட்டாளி விவசாயிகளைப் பிரதிநிதித்துப் படுத்தக்கூடிய பெரும்பான்மையான இவர்கள் வர்க்கம் சார்ந்து நிற்கின்ற, முதலாளித்துவ முதலைகளான சந்தர்ப்பவாத தலைவர்களை செல்லாக்காசாக்க வேண்டும்: மண்ணின் மைந்தர்களாகக் கிளர்ந்தெழ வேண்டும். அரசியலை நேரடியாகவே தமது கரங்களில் எடுக்கவேண்டும். அப்போதுதான் உங்கள் கேள்விக்குப் பதில் கிடைக்கும். சிங்கள பௌத்த பேரினவாத தீக்கங்குகளும் சாம்பலாக்கப்படும்.

※ சிறிலங்கா அரசுடன் இனியும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முயல்வது பயனற்றது என்பது தெளிவாகியிருக்குமே?

ஆர். வெங்கடாசலபதி,
—தர்மபுரி.

● அந்தத் தெளிவு ஏற்பட்டதனால்தான் ஆயுதப் போராட்டமே முன்னெடுக்கப்பட்டது. அதற்குப் பிறகும்... ஓ! கால, தேச, வர்த்தமானங்கள்தான் இயக்கங்களைப் பேச்சுவார்த்தைக்கு இட்டுச் சென்றன. எனவே திம்புவுக்குச் சென்று தெளிவுபெறுவது என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆசைப்பட்டவர்களுக்கும் எதிர்பார்த்தவர்களுக்கும் நம்பியவர்களுக்கும் ''தெளிவு'' ஏற்பட்டால் சரி. ★

(33ம் பக்கத் தொடர்ச்சி)

படைத்தாக்குதலில் விமானப்படையினரைக் கொலை செய்தவன் நான் என்ற விபரத்தைக் கூடச் சொல்லி விட்டு சென்று விட்டனர்.

கால்முறிந்து நடக்கமுடியாததால் குப்பைவண்டியில் ஏற்றி விமானப்படை விமானமருகே கொண்டு செல்லப்பட்டு ஏற்றப்பட்டேன். சிறை அதிகாரிகள் கூறிய விபரத்தால் விமானப்படையினர் அனைவரும் என்னை வெறியுடன் நோக்கினர். விமானம் ஓடுபாதையில் ஓடி வானில் பறந்தது. சுமார் முக்கால் மணி நேரத்தில் புதிய இடத்தில் விமானம் தரையிறங்கியது. விமானத்தை விட்டு இறக்கப்பட்ட நான் சில ஜெயிலர்களால் அழைத்துச் செல்லப்பட்டேன். தமிழர்களான அவர்கள் என்னை மட்டக்களப்புச் சிறைக்கு அழைத்துச் செல்வதாகக் கூறினார்கள்.

அன்று மட்டக்களப்புச் சிறையில் சிறைச்சாலை மருத்துவமனையில் அடைக்கப்பட்டேன். அங்கு அடைத்து வைக்கப்பட்டிருந்த எனது கழகத்தோழர்கள் அனுமதி பெற்று என்னைக் காணவந்தபோது கண்களை நீர் நிறைத்துக் கொண்டது. அது வேதனைக் கண்ணீரா, ஆனந்தக்கண்ணீரா என்று தெரியவில்லை. தொடர்ந்து 15 நாட்கள் அங்கு அடைத்து வைக்கப்பட்டிருந்தேன். பதினாறாவது நாள் கழகத்தோழர்களால் சிறைக்கதவு உடைக்கப்பட்டது.

நாம் அனைவரும் ஒன்றாக சிறையிலிருந்து மீண்டு வந்தோம். (முற்றும்)



● அட்டைப்படக் கவிதை

# சிறைகள் உடையும்

திருவாதிரையான்

மகரந்தக் கனவுகளை மூழ்கடித்து மனசு நிறைய
விடுதலை நினைவுகளுடன் போராடப் புறப்பட்டவர்கள்
கொட்டடிச சிறைக்குள்ளே இரத்தம் கொட்டி நின்றனர்!

நடுநிசி இரவும் பட்டப்பகலும்
இவர்களுக்கு ஒன்றாகவே இருந்தது!
காலை உணவும், மாலை உணவும்
கேப்பங்கழியும் கேழ்வரகுக் கஞ்சியும்!
இவர்கள் தேசத்தின் தேசிய உணவாய்
ஆக்கப்பட்டதைப்போல் — தினமும்
நிர்ப்பந்திக்கப்பட்டது! — உண்ண
மறுத்தவர் மண்டையில் குண்டாந்தடிகள்
குறிப்புகள் பதித்தன!

ஆரந் தாழ்ந்த அணிகிளர் மார்புகள், முதுகுகள்
தோல்கள் உரித்து மிளகுதூள் தூவினர்!
எரிந்து கொண்டிருந்தவை — இவர்களது
தேகம்மட்டுமல்ல! தேசமும் கூடத்தான்!

சிங்களச் சிறையுள்ளே சிறுத்தைகள் பொசுங்கினர்!
நாட்டைச் சுற்றிலும் தீநாக்கு எல்லைகள்!
தீயில்வெந்த நாட்டைக் குளிர்விக்க
உதிர ஆறு பாய்ந்தது!
எங்கும் குருதி! எதிலும் குருதி!

பாசிசச் சிறையுள்ளே பாதகர் நுழைந்தனர்!
தமிழ் மறவர் இரத்தம் குடிக்கவே உன்மத்தம் கொண்டனர்!
கால்களைப் பிடுங்கி நர்த்தனம் ஆடினர்,
கரங்களைக் கொய்து ஒய்யாரம் செய்தனர்,
விழிகளைப் பெயர்த்து கால்களில் நசுக்கினர்,
உடல்களைப் பிளந்து உதிரம் குடித்தனர்!
சாய்ந்த உடல்களைச் சவனத் தூக்கினர்
'புத்தன் முன்றலில் குவித்துப் போட்டனர்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'ஓ' புத்ததேவா!
பௌத்தனாய்ப் பிறந்த பயனைப் பெற்றோம்;
வெற்றிகள் யாவும் உந்தன் அருளே
புத்தன் சரணம் கச்சாமி
தமிழன் இரத்தம் அச்சா...மி''
புத்தனின் கண்களில் குருதிநீர் வடிந்தது!

அன்றைய பொழுதில் —
சூரியன் ஒளியிழந்து போனான்!
சூரியனுக்குள் இருட்டு! சுதந்திரமும் இருட்டு!!
சிங்கள நாகரீகத்தை இருள் மூடியது!
மனிதாபிமானமுள்ள மனிதன் எழுந்துநின்று
கூக்குரலிட்டான்!
தமிழனுக்கு நீதிவேண்டும்! நாடுவேண்டும்!!

விடுதலை வேண்டுவோர் விழிகளைப் பெயர்க்கவா
கௌதமபுத்தன் அகிம்சையைப் போதித்தான்?
போதிமரமும் குருதியில் குளிக்கவா
வைகாசி மாதத்துப் பௌர்ணமி நிலவில்
புத்தனும் புனிதனானான்?

வெங்கொடுமையைச் சிறையினுள்
சிதைந்தவர் போக — மீதி...?


விறல்மிகு வேங்கைகள் வீரமும் விவேகமும்
ஒன்று திரண்டன! ஒன்றுகலந்தன!!
ஒற்றுமை மலர்ந்தது! சிறையை உடைத்தனர்!
பாசிசத்தின் பற்கள் நொருங்கின!
நாசிசத்தின் நாக்குகள் அறுந்தன!

விடுதலைப் புறாக்கள் வானில் பறந்தன!
வீரமும் விவேகமும் விடுதலை அடைந்தன!
விடுதலை வீரர்கள் காலடித் தடங்கள்
பதிந்த இடமெங்கும் விடுதலைப் பூக்கள்
முளைக்கவே தொடங்கும்!
சிறைகள் உடைய சிந்தனை விரியும்! ★

---

● *1983-ம் ஆண்டு செப்ரெம்பர் 23-ம் நாள் இலங்கைப் பாசிச அரசின் மட்டக்களிப்புச் சிறைச்சாலை உடைக்கப்பட்டுத் தமிழ்ப் போராளிகள் மீட்கப்பட்டனர்.*






*1-8-85*

கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்புப் படையினருக்கு உதவும் மூகமாக 250 றிசேவ் பொலிசார் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் தமிழர்கள் 10க்கும் குறைவானர்களே எனத் தெரியவந்தது.

* கிழக்கு மாகாணம் அம்பாறைப் பகுதியிலுள்ள சம்பாந்துறையில் அதிரடிப்படையினர் தேடுதல் வேட்டை நடாத்திப் பல அப்பாவித்தமிழர்களைக் கைது செய்துள்ளார்கள். இத்தேடுதல் வேட்டையின் போது சலூன் ஒன்றில் முகச் சவரம் செய்தவரையும், முகச் சவரம் செய்து கொண்டிருந்தவரையும் கைது செய்ததோடு சலூனிலிருந்த 5000ரூபா பணத்தையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

* இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக எந்தத் தீர்வும் மக்கள் மூன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என 9000 பௌத்த குருமார்கள் கையெழுத்திட்டு ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளார்கள். இது பற்றிப் பௌத்த குருமாரின் பேச்சாளரும், கண்டி புனிதநகரில் அமைந்துள்ள பௌத்த மடத்தின் தலைவருமான ஸ்ரீசந்தானந்தா கருத்துத் தெரிவிக்கையில் மக்களின் அனுமதியும், ஆலோசனையுமின்றி எந்த ஒரு உடன்படிக்கையும் அமுல்படுத்தத் நாம் விடப்போவதில்லை எனக் கூறினார்.

* இலங்கை முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களுடன் இணைந்தே வாழ விரும்புகின்றனர் என்று முன்னாள் கல்வி அமைச்சர் பதியுதீன் முகமட் கருத்துத் தெரிவித்தார்.

*2-8-85*

யாழ்நகரில் நிறைவேற்றப்பட்ட மின்கம்ப மரண தண்டனையைக் கண்டித்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடந்தது. 100 பேர் வரை கலந்து கொண்ட இந்த ஊர்வலம் யாழ். பஸ்நிலையம் வரை சென்றது. மின்கம்பத்தில் மரண தண்டனை நிறைவேற்றிய இயக்கத்தைக் கண்டிக்கும் சுலோக அட்டைகளைக் கட்டித்தொங்க விட்டபின் ஊர்வலம் அமைதியாகக் கலைந்து சென்றுள்ளது.

* பூட்டான் பேச்சுவார்த்தையில் தமிழ்ப் பிரதிநிதிகள் சார்பில் வைக்கப்பட்ட மலையகத் தமிழர்களுக்கு பிரஜா

www.tamilarangam.net





உரிமை வழங்கல், தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல், தமிழ் பிரதேச நிலப்பரப்பை ஒரே தொகுதியாக ஒன்றிணைத்தல், தமிழ் மக்களைத் தனித்தேசிய இனமாக அங்கீகரித்தல் ஆகிய நான்கு பிரதான கோரிக்கைகளும் அரசால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லையென்றும், இவை தவிர்ந்த வேறு பிரேரணையைத் தமிழ்ப்பிரதிநிதிகள் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் சிறீலங்காவின் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித்அத்துலத் முதலி கூறியிருந்தார்.

**3-8-85**

வவுனியா கோவில்குளத்தைச் சேர்ந்த அம்பலவாணர் என்பவரது மில்லில் இருந்த லொறியை கருணா, பிரேம சிறி ஆகிய இரு சிங்களவர்கள் கடத்திச் சென்று 40 மூடை அரிசி மற்றும் 20 மூடை எண்ணையும் எடுத்துச் செல்கையில் மயிலங்குளத்தடியில் இவ்லொறி பிரண்டுவிட்டதாகவும், இதையடுத்து அங்குள்ள சிங்கள ஊர்காவற்படையினர் இவர்களைக் கைது செய்து, பொருட்களை எடுத்துச் சென்று பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிகிறது.

**4-8-85**

* இயக்கங்களின் பெயரால் நடைபெறும் கொள்ளைகளை யிட்டும், வாகனக் கடத்தல்களை யிட்டும் யாழ்மக்களை அவதானமாக இருக்க வேண்டுமென தமிழ் விடுதலை இராணுவம் துண்டுப்பிரசுரம் ஒன்று வெளியிட்டது.

* அரசாங்க சிவில் நிர்வாகத் துறையில் தமிழர்களை ஒதுக்குவதற்கு திரை மறைவில் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரசாங்கத்திலுள்ள தமிழ் அமைச்சர்கள், ஜனாதிபதி ஜே.ஆரிடம் புகார் கொடுத்தனர்.

* நாடற்றவர்கள் அனைவரையும் எந்தவித நிபந்தனையுமின்றி இலங்கைப் பிரஜைகளாக ஏற்க வேண்டும் என்று இலங்கை தோட்ட தொழிலாளர் செயலாளர் வே. அண்ணாமலை தோட்டத் தொழிலாளர் கல்விக் கருத்தரங்கொன்றில் உரையாற்றியபோது குறிப்பிட்டிருந்தார்.

**5-8-85**

பூட்டான் பேச்சுவார்த்தையை கண்டித்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று ஊர்காவற்துறையிலிருந்து பங்களாவடிவரை நடைபெற்றுள்ளது. இதில் இயக்கங்கள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டும் என்ற கோசம் எழுப்பப்பட்டது. இவ்வூர்வலத்தில் பெருந்தொகையான மாணவர் கலந்துகொண்டனர். ஊர்வலத்தின் இறுதியில் பொதுக்கூட்டம் ஒன்றும் நடைபெற்றிருந்தது.

**5-8-85**

காலை 8 மணி தொடக்கம் 9 மணிவரை காங்கேசன்துறை கடற்கரைப்பகுதியில் பீரங்கி முழக்கம் கேட்டதையடுத்து அப்பகுதியில் பதட்ட நிலை ஏற்பட்டிருந்தது.

**6-8-85**

பயங்கரவாதத்தை முறியடிப்பதற்கான தேவை ஏற்படின் அரசாங்கம் அபிவிருத்தித் திட்டங்களையும் கைவிடத் தயங்காது எனச் சிறீலங்காவின் ஜனாதிபதி கூறியிருந்தார்.

* வவுனியாவில் நடந்து வந்த இனம் தெரியாத ஆள்கடத்தல் சம்பவங்களையடுத்து சமணன்குளம், மாமடு, பாவற்குளம், வாரிக்குட்டியூர், பெரியகுளம் ஆகிய பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேறி வேறு இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். இதனையடுத்து இப்பகுதியில் நடைபெற்றுவந்த கொள்ளை, கொலை, பெண்களை மானபங்கப்படுத்துதல் ஆகிய சம்பவங்கள் குறைந்துள்ளன.

**7-8-85**

வடக்குகிழக்கு மாகாணங்களிலுள்ள ஆயுதப்படைகளுக்கு உதவுவதற்கு தேசியத் துணைப் படை ஒன்றை சிறீலங்கா அரசு உருவாக்கியுள்ளது.

* வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்பதானது நாட்டைத் துண்டாடுவதற்கு ஒப்பானதாகும், எனவே வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை எனச் சிறீலங்கா ஜனாதிபதி ஜயவர்த்தனா தமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பேசும்போது கூறினார்.

**8-8-85**

பொலநறுவை மாவட்டத்திலுள்ள வெலிகந்தை இராணுவ முகாம் மீது தமிழீழப் போராளிகள் குழுவொன்று தாக்குதல் நடாத்தியுள்ளதாக இராணுவத் தலைமைப்பீடம் அறிவித்தது. இருதரப்பிலும் சேதம் எதுவும் இல்லை என அறிவிக்கப்பட்டதோடு பொலநறுவை மாவட்டம் முழுவதும் தேடுதல் வேட்டையும் முடக்கிவிடப்பட்டது.

**9-8-85**

தங்கசாலைச் சிறைச்சாலையிலுள்ள 35 தமிழ் இளைஞர்கள் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பதாக அறியப்பட்டது.

**10-8-85**

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு புறப்பட்ட கடுகதி ரயில் வண்டி கிளிநொச்சியிலும் வவுனியாவிலும் வைத்துப் பயங்கரவாதிகளால் நிறுத்தப்பட்டு பயணிகள் வெளியேறுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதன் பின்பு பிற்பகல் மட்டில்தான் கடுகதி கொழும்புக்குப் போய்ச் சேர்ந்தது.

**11-8-85**

லலித் அத்துலத் முதலி திருகோணமலையில் பாதுகாப்பு ஒழுங்குகளைப் பார்வையிட்டு விட்டு நலன்புரி நிலையங்களிலுள்ள அகதிகளைச் சந்தித்து உரையாடினார். சீனன்குடா கடற்படைத் தலைமையகத்தில் நடந்த மாநாட்டில் கிழக்கு மாகாணத்தில் ஏற்படும் தீவிரவாத நடவடிக்கைகளுக்குப் பதில் சட்டநடவடிக்கை எடுக்க லலித் ஆணை பிறப்பித்தார். கிராமங்களை விட்டு வெளியேறியுள்ள மக்களை மீண்டும் குடியமர்த்துவது பற்றிப் படை அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்தார்

**13-8-85**

பூட்டான் தலைநகரான திம்புவில் தமிழ்பிரதிநிதிகளுக்கும், சிறீலங்கா அரசபிரதிநிதிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை ஆரம்பமானது. இதில் தமிழர்பிரதிநிதிகள் ஆரம்பித்த சமரசதிட்டத்தை ஏற்க சிறீலங்கா அரசபிரதிநிதிகள்

www.tamilarangam.net



மறுத்தனர். தமிழரசின் சமரசத் திட்டத்தை ஏற்பதானது தமிழீழம் வழங்குவதற்கு ஒப்பானது என சிறீலங்கா பிரதிநிதிகள் கூறினர்.

**13-8-85**

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து குடிபெயர்ந்த சிங்களவர்கள் மீண்டும் தமது இல்லங்களுக்குத்திரும்பும்வரை திம்பு தீர்மானங்கள் அமுல்ப்படுத்தப்படாது என திரிகோண மலை கந்தளாய் என்னும் இடத்திலுள்ள சிங்கள அதிகாரிகள் முகாமில் உரை நிகழ்த்தும்போது அத்துலத்முதலி கூறினார்.

**14-8-85**

வவுனியாவில் இராணுவத்தினரின் ரோந்து அதிகரித்துள்ளமையால் மக்கள் கடந்தச் சம்பவங்கள் தொடங்கலாம் என்ற அச்சம் காரணமாக வெளியே நடமாடவில்லை. நகர் வெறிச் சோடிப் போயுள்ளது.

**15-8-85**

வவுனியா அருகில் பாவற்குளம் என்ற இடத்தில் தியாகராஜன், சிவபாலன், பத்மராஜா ஆகிய 3தமிழ் இளைஞர்களை சிங்கள இராணுவத்தினர் ஒரு வீட்டினுள் போட்டு பூட்டித் தீவைத்தனர். அந்த 3 இளைஞர்களும் தீயில் துடிக்கத்துடிக்க வெந்து மாண்டனர். இச்சம்பவம் நடந்தபோது அந்தப்பகுதியில் ராணுவ ஹெலிகொப்டர் ஒன்று தாழ்வாகப் பறந்து வட்டமடித்துக் கண்காணித்து கொண்டிருந்தது எனக் கழகவட்டாரங்கள் அறிவித்தன.

**16-8-85**

வடக்கு கிழக்குப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள குழப்பநிலை காரணமாக 30,000 பேர் வேலையிழந்துள்ளனர் எனவும் மீன்பிடித்தொழில் 60% பாதிக்கப்பட்டுள்ளதெனவும் கடற்றொழில் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா சிறந்த மீன்பிடித் துறைமுகத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போது கூறினார்.

**17-8-85**

நாடு பிளவுபட அனுமதிக்கப்படமாட்டாது என்றும், யுத்தம் மூலமோ அல்லது சமாதானம் மூலமோ நாட்டைப் பிளவுபடுத்துவதை தடுக்க திடசங்கற்பம் பூண்டுள்ளதாக ரொனி டி மெல் கூறினார்.

**18-8-85**

வவுனியா பகுதியில் நடைபெற்ற இனப்படுகொலையை அடுத்து அப்பகுதியின் கிராமங்களிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேறியுள்ளனர். இனப்படுகொலையை அடுத்து வவுனியாவிற்கு அருகிலுள்ள மூன்றுமுறிப்பு, தச்சன்குளம், தோணிக்கல் ஆகிய கிராமங்களில் மக்கள் யாருமின்றி வெறிச்சோடியுள்ளது. இதன் விளைவாக அங்குள்ள அரச பொது மருத்துவமனையில் பணிபுரிந்துவந்த தமிழ் டாக்டர்கள் வெளியேறினர்.

**19-8-85**

இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த 4 நாட்களில் 320ற்கு மேற்பட்ட தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் 150க்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.



**20-8-85**

கடந்த 18-8-85 அன்று மன்னாரிலுள்ள முருங்கன் பகுதியில் 20பயணிகளுடன் ராணுவத்தால் கடத்தப்பட்டு தள்ளாடி ராணுவ முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்ட வான் இப்போது வெறுமெனே உள்ளதாகவும் பயணிகள் பற்றிய விவரம் தெரியவில்லையெனவும் தெரியவந்துள்ளது.

**21-8-85**

வவுனியாவில் சென்ற வாரம் நடந்த வன்முறைச் சம்பவங்கள் குறித்து ராணுவ விசாரணை ஒன்றை நடத்துவதற்கு ஜே.ஆர். ஜெயவர்த்தனா உத்தரவிட்டுள்ளார். இச்சம்பவங்கள் பற்றி முன்னுக்குப்பின் முரணான தகவல்கள் வந்ததே இதற்கு காரணம் எனத் தெரிகின்றது.

**22-8-85**

வவுனியாவில் 220ற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டது தொடர்பான விசாரணையை சிறீலங்கா அரசு ஆரம்பித்துள்ளது.

**24-8-85**

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பாலசிங்கம் மற்றும் சந்திரகாசன் ஆகிய இருவரும் இந்திய அரசின் நாடு கடத்தல் உத்தரவுப்படி இரவு விமானம்மூலம் நாடு கடத்தப்பட்டனர். பாலசிங்கம் லண்டனுக்கும் சந்திரகாசன் அமெரிக்காவுக்கும் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

**25-8-85**

தமிழீழத் தலைவர்களை நாடு கடத்தியதைக் கண்டித்து தமிழீழ ஆதரவாளர்கள் அமைப்பினால் பேரணி ஒன்றும் அதனைத் தொடர்ந்து பொதுக் கூட்டமும் நடாத்தப்பட்டது.

* கொழும்பிலுள்ள வெலிக்கடைச் சிறையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த மூவரும் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இம்மூவரில் ஒருவர் இறந்துவிட்டார். மேலும்வெலிக்கடைச் சிறையிலுள்ளமனோகரன், யோகேஸ்வரன் ஆகிய இரு இளைஞர்கள் இன்றிலிருந்து சாகும்வரை உண்ணாவிரதத்தினை ஆரம்பித்துள்ளார்கள்.

* தங்காலையில் கொலையுண்ட கைதிகளுக்காக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், 'விடுதலை செய் அல்லது விசாரணை செய்' என்ற சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர்.

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் ஹெலிகொப்டர் மூலம் மேலாகப் பறந்து உயிலங்குளம், வங்காலை ஆகிய பகுதிகளின் மேலாகப் பறந்து வங்காலைப் பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தேசிய இனப்பிரச்சனையும் முஸ்லீம் மக்களும்

**வ.ஐ.ச.ஜெயபாலன்**

கொழும்பு மேலோரின் நலன்களுக்காகவும், இலங்கை முழுவதிலும் முஸ்லிம் மக்கள் பரந்து வாழ்கின்றனர் என்ற காரணத்துக்காகவும், தமது பாரம்பரியப் பிரதேசங்களைத் தொடர்ந்தும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களுக்கும், சிங்கள பௌத்த தேசியவாதத்தின் அபிலாசைகளுக்குமாகத் தத்தம் செய்து தர அம்பாறை போன்ற முஸ்லிம் பாரம்பரியப் பிரதேசங்களில் வாழும் இளைய தலைமுறையினரும், மக்களும் தயாரில்லை என்பதை அண்மைக் கால முஸ்லிம் அரசியற் போக்குகள் துலாம்பரமாகக் காட்டி வருகின்றன. இது தொடர்பாக இளம் ஆராய்ச்சியாளரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளருமான எம்.வை. எம். சித்திக் தனது புகழ்பெற்ற அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் நிலப்பிரச்சினைகளும், குடியேற்றப் பிரச்சினைகளும் என்ற கட்டுரையில் தெரிவிக்கும் கருத்துகள் மனம் கொள்ளத் தக்கனவாகும்.

தமிழ்பேசும் மாநிலத்து முஸ்லிம் மக்கள் தமது பாரம்பரிய பிரதேசங்களைப் பாதுகாப்பது குறித்தும், சிங்கள மாநிலத்தில் குறிப்பாக நிலப்பசிமிக்க ஈர வலயத்தில், தமது பாரம்பரியக் கிராமங்களிலும் நகரவட்டாரங்களிலும் வாழும் முஸ்லிம் மக்கள் அவற்றின் எல்லைகளை வரையறுத்து அரசினதும், அரசு ஆதரவு பெற்ற நிலப்பசி மிகுந்த ஈரவலயச் சிங்கவர்களது ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராக அவற்றைப் பாதுகாப்பது குறித்தும் அணிதிரளவேண்டும் என்பதும், இதனை அடிப்படையாகக் கொண்டே அவர்கள் தமது தலைமையைக் கட்டி எழுப்புதல் வேண்டும் என்பதும் இன்று காலத்தின் தேவையாகும்.

**கிழக்கு மாகாணமும், தமிழ் பேசும் மக்களின் எதிர்காலமும்:**

இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களது எதிர்காலம் பற்றிப் பார்த்தசாரதி ஒழுங்கு செய்த பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணியினரிடையே, ஒரு முஸ்லிமாவது இல்லை. தமிழ் பேசும் மக்களது பாரம்பரியப் பிரதேசங்களான வடக்குக் கிழக்கு மாகாணங்கள், தமிழ் பேசும் மக்கள் என்ற வகையில் இந்த மாநிலத்தில் வாழும் முஸ்லிம் மக்களதும் பாரம்பரியப் பிரதேசமாகும்.

முஸ்லிம் மக்களையும் உள்ளடக்கிய நிலையில் மட்டுமே, கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் மக்கள் உரிமை கொண்டாடுவது சாத்தியமாகும். குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டம் தவிர்ந்த அம்பாறை, திருகோணமலை மாவட்டப் பிரதேசங்களில் இதுவே உண்மை நிலைமையுமாகும்.

ஒடுக்கும் எதிரிகளின் அறிஞர்கள் அறிந்து வைத்திருக்கும் ஒரு முக்கிய விடயம் தொடர்பாக, தமிழர் தலைமை அடிப்படைப் பிரக்ஞையே இல்லாமல் இருப்பது எவ்வாறு சாத்தியமாயிற்று? கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் எதிர்காலம் தொடர்பாக முன்னாள் மூதூர் நாடாளுமன்ற உறுப்பினரான திரு. அப்துல் மஜீத் பயனுள்ள பல கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். தமிழ் பேசும் மக்களது ஐக்கியமான எதிர்காலத்தில் ஆர்வமுள்ள யாவரும் இத்தகைய கருத்துக்களில் அக்கறை செலுத்துவது அவசியமாகும்.

உண்மையில் கிழக்கு மாகாணம், புத்தளம், மன்னார்ப் பிரதேசங்களில் வாழும் முஸ்லிம் மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்காத எந்த ஓர் இயக்கமும் தம்மை அனைத்துத் தமிழ் பேசும் மாநிலத்தின் மக்கள் இயக்கம் எனக்கூறிக் கொள்ளுதல் முடியாது. ★

எமது அரசியல் வரலாற்றினதும், சிந்தனைப் போக்கினதும் அடிப்படைத் தவறுகளுக்கு மூல காரணமாக அமைவது, எமது 'யாழ்ப்பாண நோக்கு.'

இந்தப் படுமோசமான, அக நிலை நோக்கினால் (Subjective Out Look) நாம் நமது பிரதேசங்களைப் பற்றியும். அப்பிரதேசங்களில் வாழும் மக்கள் பற்றியும் பல தவறான கருத்துக்களுக்கு ஆளாகியிருக்கிறோம். நமது போராட்டங்களும் இயக்கங்களும் யாழ்ப்பாணத்துக் குட்டி பூர்ஷுவா வட்டங்களையும், இளைஞர் மட்டங்களையும் உடைத்துக் கொண்டு பரந்துபடுவதற்குத் தடையாக அமைவதும், இந்த யாழ்ப்பாண நோக்கேயாகும். அடிப்படையில் தவறான அரசியல் கையாளுகைக்கும், தோல்விகளுக்குமே இது வழி வகுக்கும்.

கிழக்கு மாகாணம் இலங்கைத் தமிழர்களது மாகாணம் என்ற எமது கருத்தும், இத்தகைய 'யாழ்ப்பாண நோக்கில்' எழுந்த கருத்தே. உண்மை அது அல்ல; கிழக்கு மாகாணம் இலங்கைத் தமிழ் பேசும் மக்களது பாரம்பரியப் பிரதேசம் என்பதே உண்மையாகும்.

திட்டமிட்ட அடிப்படையிலான சிங்களக் குடியேற்றம், சிங்கள மீனவர்களின் பருவ காலக் குடிவரவுகளைத் திட்டமிட்ட அடிப்படையில் நிரந்தரமாக்குதலும் விரிவாக்குதலும் போன்ற நடவடிக்கைகளால், (இந்த மீன்பிடியாளர்களிற் பலர் காலப்போக்கில் சிங்களமயமாகிய, பரவர் போன்ற தென் இந்திய மீன்பிடிச் சாதி

www.tamilarangam.net



களைச் சேர்ந்த தமிழர்களாவர்.) நமது பாரம்பரியப் பிரதேசமான கிழக்கு மாகாணம், நாளுக்குநாள் பறிபோய்க் கொண்டிருக்கின்றது. இத்தகைய அவசரச் சூழலிலாவது நாம் கிழக்கு மாகாணத்தின் நிதர்சனத்தை உணர்ந்து, அதன் அடிப்படையில் சிந்திக்கவும் அரசியல் நடவடிக்கைகளைச் செம்மைப்படுத்தவும் வேண்டுவது அவசியமாகும்.

இத்தகைய தமிழ்பேசும் மக்களின் ஐக்கியத்தால்-இத்தகைய ஐக்கியம் ஒன்றினால் மட்டுமே, அடிப்படையில் கிழக்கு மாகாணம் பாதுகாக்கப்படும். ●

கிழக்கு மாகாணத்தின் சனத்தொகை அமைப்பு 1981ம் ஆண்டின் புள்ளி விபரங்களின் அடிப்படையில், பின்வருமாறு அமைந்துள்ளது.

| இனப்பிரிவு | சனத்தொகை | விதாசாரம் |
|---|---|---|
| இலங்கைத்தமிழர் | 399,406 | 40.90 |
| மலையகத் தமிழர் | 12,045 | 1.24 |
| முஸ்லிம் மக்கள் | 315,201 | 32.28 |
| சிங்களவர் | 243,358 | 24.92 |
| ஏனையோர் | 6,465 | 0.66 |

வடக்குக் கிழக்கு மாகாணங்களின் மொத்தக் குடிசனத் தொகையில் 17.62 சதவீதத்தையும், கிழக்கு மாகாணத்தின் குடித்தொகையில் 32.28 சதவீதத்தையும் கொண்டுள்ள முஸ்லிம் மக்கள் கிழக்கு மாகாணத்தின் மிகப்பெரிய மாவட்டமான அம்பாறை மாவட்டத்தில் 41,6 சதவீத மக்களாக அமைந்து முதன்மை பெறுகின்றனர். இம்மாவட்டத்தில் தமிழர்கள் தொகை மொத்த மக்கள் தொகையில் 20.1சதவீதம் மட்டுமே.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டம் மட்டுமே சனத்தொகை அடர்த்தி, தமிழரது தனிப்பெரும்பான்மை போன்ற விடயங்களிலாவது, யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் ஓரளவு ஒப்பீட்டுத்தன்மை பெறுகின்றது.

(தொடரும்)

# பலிகொண்ட பொலி நிலம்

முல்லைத் தீவான்

களம்விரித்துச் சூடுதள்ளி
எருமைகளின் [illegible]ாக்கி
பொலியெடுத்த வன்னிநிலம்
இன்றும் அதுவாறாய்
பலியெடுத்தல் நிகழ்ந்துளது.
காட்டுத்துறை மீது யானைப்புதர் நடுவில்
ஊர் விரித்த எம் வாழ்வில்,
எந்தச்சுமைகளையும் இமை இடுக்கால்தூக்கி
தூரத்தே வீசும் என் வாழ்வின் முன்னால்
சுளகெடுத்து முகில்கலைக்க வந்தாய் தீயோய்
— எம்ஊரை
களவெடுத்துக் கன்னமிட்டுக் கவர்ந்தோமல்லோம்
நிலவெடுத்து ஏர்தள்ளி ஊரைச்செய்தோம் — இப்போ
கன்னமிடும் கயவோய்
சுளகெடுத்தோ முகில்கலைக்கப் பார்க்கின்றாய் நீ?
ஒருநாள்—
கை உளைந்து நீ களைத்து
எங்கள் காட்டுக்குறை கடந்து போவாய்.
'ஆலம் விதைக்குள்ளா — இந்த
அசுர விருட்ச'மென
அஞ்சிநீ ஓடும் நாள்வரை
காட்டுக் கரை நிறைய
பன்றியைப் போலெம்மைக் கட்டுப் புதை
வீழ்வன எல்லாமே மனிதத்துகள்களா?
ஆலம் விதைகளல்லவா!
ஏர்தள்ளி ஊர் செய்த எங்கள் ஊரை
பார்தள்ளி வெல்கின்றேன் பார்.
போதலும் வருதலும் உண்மை நிகழ்வென்றால்
பார்தள்ளி வெல்கின்றேன் பார்
பார்தள்ளி வெல்கின்றேன் — பார்.

* ஆவணி 85ல் ஒரே நாளில் 150 தமிழர்கள் வவுனியாவில் கொல்லப்பட்டனர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

R. N. 42574/84 http://www.thamizham.net Regd. No. TN/MS/480

பொங்கும்

# தமிழமுது

தமிழ் ஈழ மாணவர் பேரவை

"தன் தலைவிதியைத்
தனது —
சொந்தக் கரங்களில்
எடுத்துக்கொள்ளாத
எந்தச் சமூகமும்
உருப்பட்டதாக
வரலாறு இல்லை!"

நூல் அஞ்சல்

அனுப்புவோர்:
தமிழ்ழ மாணவர் பேரவை
28, சி. என். கே. சாலை,
திருவல்லிக்கேணி,
சென்னை-600 005.

பெறுநர்:

வெளியிடுபவர்: இரா. கபிலன், 25, ஜெயராம செட்டித்தெரு, சென்னை-600106.
அச்சிடுவோர்: பாவாணர் அச்சகம், 116, கவைர் செட்டித் தெரு, சென்னை-2.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்